போஸ்டு ரி. நே. 819.

உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை,

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி ௩. | விரோதிகிருது ஹூ கார்த்திகைமீ | பகுதி ௮

பொருளடக்கம்.


| | |
|---|---|
| டில்லிமாநகரில் மஹாமாட்சிமைதங்கிய ஐந்தாவது ஜார்ஜ் மஹாராஜ சக்கரவர்த்தி அவர்களின் மகுடாபிஷேகம். —பத்திராதிபர். | ௨௩௩ |
| சைவம் நாட்டிய தமிழ் மாது—ஐ. சாமிநாதமுதலியார் | ௨௩௬ |
| இல்லறம்—நா. பழ. நாகப்பன் | ௨௩௮ |
| மலேரியா என்னும் விஷஜுரம்—சர்க்கார் பிரசுரம் | ௨௪௧ |
| மாலினீ மாதவம்—R. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A. B. L. | ௨௪௩ |
| பஞ்சபூதம்—வி. எஸ் முத்துசாமி ஐயர் | ௨௪௭ |
| முத்ரா ராக்ஷஸம்—R. வேதநாராயண சர்மா B. A. B. L. | ௨௪௮ |
| பேற்றோபவேணல்—வீர. சு. பழநியப்பன் | ௨௫௧ |
| நாட்டுக்கோட்டையாரும் வீடுகட்டுதலும்—M. சின்னையாசெட்டி | ௨௫௫ |
| ஒரு பெருந்துக்கம்—பத்திராதிபர் | ௨௫௭ |
| ஸ்ரீ பொ. பாண்டித்துரைசாமியவர்கள் பிரிவாற்றாமைபற்றிய இரங்கற்பாக்கள். — மு. ரா. அருணாசலக்கவிராயர் | ,, |
| — மு. ரா. கந்தசாமிக்கவிராயர் | ௨௬௧ |
| — திரு. இராமசாமி ஐயங்கார் | ௨௬௩ |
| — சர்க்கரை இராமசாமிப்புலவர் | ௨௬௪ |
| புத்தககுறிப்பு—பத்திராதிபர் | ௨௬௭ |
| வர்த்தமான சாரக்கோர்வை—பத்திராதிபர் | ௨௬௮ |


மு. ரா. கந்தசாமிக் கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபால கிருஷ்ணையர். } பத்திராதிபர்
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். }

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ. இரண்டுதான்.
மாணாக்கர்கட்கு ஹூசந்தா ரூ 1. தபாற்கூலிவேறு. தனிப்பிரதி அணா 3.

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.

வித்தியாபாநு விளம்பரம்.

# இதை நினையுங்கள்.

உங்களுக்கு நவீனமும் நாகரீகமுமான நூதன பாரிஸ் கலர்களில்

அதாவது,

## ரோஜா, கத்திரிப் பச்சை, நீலம், மேகவர்ணம், பவளம், வெளிர்ப்பச்சை, தாமிரம், ஆரஞ்சு.

இந்தக் கலர்களில்

**ரவிக்கை குட்டைகளும், புடவைகளும்**

தேவையாயிருந்தால் நீங்கள்

காசியிலுள்ள பட்டு வர்த்தகம்

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி

க்குத்தான் எழுதவேண்டும்.

ஏனெனில்,

நம்மவர்களுக்கு பலக்தான பலவிதமான தினுசுகள் அவர்களிடத்தில் தான் ஜாஸ்தியாக இருக்கின்றன.

அநேக ஸ்திரீகள் தங்களுக்குத்தகுந்த ரவிக்கை தினுசுகளும் புடவை தினுசுகளும் கிடைப்பதைப்பற்றிக் குறிப்பாக இருக்கிறார்கள்.

இந்தக் கம்பெனியார் சப்ளைசெய்யும் தினுசுகள் வெளியூர் ஜனங்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுக்கமுடியும்.

இவர்களுக்கு வரும் வெளியூர் ஆர்டர்களை மிக கவனத்துடன் கவனித்து அனுப்புவதால் வெளியூரார்களுக்குத் தகுந்த தினுசுகளை அனுப்பப்படுமென்பது திண்ணம்.

| | |
|---|---|
| 42 இஞ்சு அகலம்<br>8 கஜம் நீளம் | புடவை 1க்கு விலை<br>ரூ 25 முதல் ரூ 50 வரை. |
| 42 இஞ்சு அகலம்<br>20 இஞ்சு நீளம் | ரவிக்கை 1-க்கு விலை<br>ரூ 2—8—0 முதல் ரூ 5 வரை |

எங்கள் ஜெனரல் கேட்லாக் இனமாக அனுப்புவோம். எமது சரியான விலாசத்தை மறந்துவிடாதிருக்க பிராத்திக்கின்றோம். (விலாசம்)

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

பட்டுப்பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீகாசி. Benares City.

*Supplement to the "Vidya Bhanu"*




மாக்ஷிமை தங்கிய
ஐந்தாம் ஜார்ஜூ சக்கரவர்த்தி.



மாக்ஷிமை தங்கிய
மேரி சக்கரவர்த்தினி.

MADRAS : THE GUARDIAN PRESS, MOUNT ROAD

உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௩. } விரோதிகிருது௵ கார்த்திகை௴ { பகுதி ௮.

டில்லிமாநகரில் மஹாராமாட்சிமை தங்கிய

## ஐந்தாவது ஜார்ஜ் மஹாராஜ சக்ரவர்த்தி அவர்களின் மகுடாபிஷேகம்.

இதோ நமது கண்முன்னே திருவுருக்கொண்டு விளங்குகின்றவர்களான நமது கருணைபொருந்திய மஹாராஜா ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களும், சக்கரவர்த்தினி மேரி அம்மையாரவர்களும் நிகழும் 1911௵ டிசம்பர்௴ 12உ பகல் 12 மணிக்கு டில்லிமா நகரில் மகுடாபிஷேகம் பெற்றார்கள். கடவுள் கருணையால் சகல மங்கள கோலாகல வைபவமாகவே இக்கொண்டாட்டம் நிறைவேறியது. இக்காலத்தே நமக்குச் சில நன்மைகள் கிடைக்குமென்று மட்டும் ஜனங்கள் எண்ணியிருந்தார்களே யல்லாமல் நமது மஹாராஜா அவர்கள் செய்த மிகப் பெரிய நன்மைகள் கிடைக்குமென்று எதிர்பார்க்கவில்லை. ஜனங்கள் எதிர் பாராத அத்தனை பெரு நன்மைகளை சக்கரவர்த்தியவர்கள் நமக்குச் செய்

திருக்கிறார்கள். முதலாவது பங்காளப் பிரிவினையை நீக்கி ஒன்று படுத்தினார்கள். இது வங்காளிகட்கு அளவுக்கு மிஞ்சிய பெரு மகிழ்ச்சியைத தருவதென்பதில் தடையில்லை. பிரைமெரிக் கல்வி விர்த்திக்காக 50 லட்சம் ரூபா கொடுத்திருக்கிறார்கள். இது இந்தியர்கட்கெல்லாம் மிகப் பெரிய நன்மை யென்பதை யார்தான் அறியார்கள்? இதுவரை இந்துக்கள் பெறாத பல பெரிய உத்தியோகங்கள் இந்துக்களின் கல்விக்கும் யோக்கியதைக்கும் தக்கபடி கொடுப்பதாக உத்தரவு செய்தார்கள். 50 ரூபாவுக்குட்பட்ட உத்தியோகர்கட்கு அரைமாசச் சம்பளம் இனும் கொடுப்பதாகக் கட்டளையிட்டார்கள். 100 ரூபாவுக் குட்பட்ட கடன்காரச் சிவில் கைதிகளை விடுவித்து அவர்கள் கடனை கவர்ன்மெண்டாரே தீர்ப்பதாக வாக்களித்தார்கள். மற்றும் பல கைதிகளை விடுதலை செய்தார்கள். சிலர்குப் பட்டங்கள் அளித்தார்கள், இன்னும் பல நற்காரியங்களைச் செய்தார்கள். இவைகளெல்லாம் நமது சக்கரவர்த்தியவர்கள் நமமவர்மேல் வைத்திருக்கும் பரிபூர்ண கிருபையின் அடையாளங்களே யாகும். அன்றியும் மஹாராஜா அவர்கள் ஒவ்வொரு சமயத்திலும் நம்மவரிடத்தமிகவும் அபிமானம் பாராட்டிப் பேசி வருவதைப் பார்க்க இதுவரை ஆங்கில அரசாட்சியில் நம்மவர் அடையாத எத்தனையோ பெரிய நன்மைகளெல்லாம இனி நமக்கு வாய்க்குமென்பது நிச்சயமாகவே தெரிகிறது.

இதுவரை இராசப்பிரதிநிதிகளே இங்கு வந்திருந்து மகுடாபிஷேக வைபவத்தை நடத்துங் காட்சி யளிப்பது வழக்கமாயிருக்க இப்போது நமது கருணாநிதியாகிய சக்கரவர்த்தியவர்களும் சக்கரவர்த்தினியவர்களும் தங்கள் பரிவாரங்கள் சுற்றத்தார்கள் ராஜாக்கள் பிரதிநிதிகள் கனவான்கள் முதலிய பல்லாயிரம் ஜனங்களுடன் தாங்களே நேரில் வந்து மகுடாபிஷேகங் கொண்டு நமக்களித்த அற்புதக் காட்சியானது நம்மிடத்து அவர்கட்குள்ளதாகிய அந்தரங்க அபிமானத்தை வெள்ளிடைமலை போல் விளக்குகின்றதல்லவா? இவர்கள் இங்கிலாண்டை விட்டுப் புறப்படத் துணிந்தபோதே சிலர் தடுக்கவும் தங்கள் கருணைமேலீட்டாலும் நாம் செய்த பூர்வ புண்ணியத்தாலும் தாங்களே நேரில் வந்து முடிசூடுந் திருக்காட்சி கொடுக்

ஐந்தாவது ஜார்ஜ் மகாராஜா அவர்கள் மகுடாபிஷேகம் உஙு

கப் பெற்றோம். இந்திய தேச வாசிகளுக்கு இதைவிடச் சிறந்த பாக்கியம் என்ன இருக்கிறது? கருணாநிதியாகிய ஐந்தாம் ஜார்ஜு சக்கரவர்த்தி மஹா ராஜா அவர்களும், சக்கரவர்த்தினி மேரி அம்மையாரவர்களும் பன்னெடுங்காலம் சுக ஜீவிகளாயிருந்து புத்திர பௌத்திராதிகளுடன் நீதி பரிபாலனம்செய்து பெருமகிழ்ச்சியுடன் வாழும் வண்ணம் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை இறைஞ்சுகின்றனம்.

## இராச வாழ்த்துப்பாக்கள்.

அன்னைநிகர் மாராணி விக்டோர்யா பெருமாட்டி யன்பா லீன்ற
முன்னவர்ஏழாம்எட்வர்ட்மஹாராஜர் புதல்வர்நலம்முற்றும்வாய்ந்த
மன்னவர் ஐந்தாம் ஜார்ஜு மகராணி மேரிஎனும் மங்கையோடு
மின்னுமணி முடிபுனைதார் பிரிட்டிஷ் அரசாட்சி என்றும் வெல்கமாதோ.

தருமன்முதல் ஐவருமோ ருருவாகி வந்தமையித் தரணி யெல்லாம்
தெரிதர ஐந்தாம் ஜார்ஜு மன்னரெனப் பெயர்புனைந்த செங்கோல்வேந்தர்
கருணையினற் பாண்டவர்கள் அரசிருக்கைத் தலத்துமுடி கவிக்கப் பெற்றார்
இருநிலத்தோர்க் கொருகுறையு மில்லையினிப் பெருமகிழ்ச்சியெய்துந்தானே.

ஆங்கிலமன் னவரெவரு மிதுகாறும் புரியாத அநேக நன்மை
ஈங்குவந்து நமக்கீந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்பிரா னென்றும்வாழ்க
ஓங்குமவன் குலத்தோருஞ் செங்கோலுங் கருணையுமே லோங்கி வாழ்க
பாங்குபெறு ராஜபக்தி யுடனுறும் அவன்குடைக்கீழ்ப் பாவி வாழ்க.

உலகமெனும்நாவாயில்ஓங்குபுகழ்மரம்நாட்டி'யூனியன்ஜாக்'
அலகில்பெரும்பாய்விரித்தேஅசசமெனும்புயற்காற்றிகணுகித்தாக்க
வலிமைமிகுபாறையினில்மோதாமல்சுகக்கரையின்மதிக்கோலாலே
செலவுறசசெய் "மாலுமிவேந்" தைந்தாம் ஜார்ஜ் நீடுழி சிறப்பவாழி.

பத்திராதிபர்.

# சைவம் நாட்டிய தமிழ் மாது.

## IV சுரந் தீர்வு.

(214-ம் பக்கத் தொடர்ச்சி.)

இஃதின்னனமாக, மானியார்க்கு எல்லையில்லாக் கவலை மட்டறியாது பெருகியது. கணவனை அவன் சென்றிருந்த அல்வழியினின்றும் மீட்டு, நல்வழிக்குக் கொண்டுவர யாதுசெய்தாலாகும் என்று அல்லும் பகலும் கவன்று கொண்டிருக்கும் சமயத்தில், அக்கவலையோடு, தன்னிமித்தம், ஆண்டு அற்றைநாள் எழுந்தருளி யுள்ள அடிகளுக்கும் அடியார் குழாங்களுக்கும் எச்சமயம் யாதுறுமோ என்ற பெருங்கவலையுஞ் சேர்ந்ததால் 'அவரது மனநிலை யாதாகும்!' என்பது யோசிக்கற் பாலது.

இந்த நிலையில் சூரியன் அஸ்தமன மாயினன். "இவன் நிரம்ப நல்லவன். எமது வருகை யறிந்து எதிர்நில்லாது ஒதுங்கிப் பதுங்கிவிட்டான். இவனை 'இருட்பகை' யென்று சொல்பவர்கள் யதார்த்தவசனிகளாகார்கள்" என்று குதூகுலிப்புடன் வந்த நிசிராஜன் ஆட்சியின் பாலாயிற்று இந்நில வுலகம். நாயும் நரியும் பேயும் கழுகும் அவனது பரிவாரங்கள்; "முழுமதியன்" முதலாகத் "திணியிருளன்" ஈறுக மந்திரிமார் பதினைவர். இவர்கள் நாளுக்கு ஒருவராய் வரிசைக்கிரமமாய் அரசன் சபைக்கு வரும்படி ஏற்பாடு. மேற்கூறிய இருவரிடத்திலும மிக்க நேசமுடையவனாய் மாதம் ஒருமுறைவந்தாற் போதும் என்று திட்டம்செய்திருந்தான். அரசகாரியத்தின் உயர்வுதாழ்வு, ஆலோசனை சொல்ல அமைந்த மந்திரியின் பெருமைசிறுமைக கேற்றதாயிருக்கும் என்பது யாரும் அறிந்தகாரியம்.

"மதிக்கு மதிக்குமுறை வந்துறுநாள் வையம்
துதிக்குநிசிக் கோமானைத் தூற்றிக்—கதிக்கும்
கரவு புரிநீழும் காவலரை யில்லா
விரக மிகுமாதும் வெய்து.

" இருளன் முறையுலகில் யாரும் நடுங்கக்
கரவுபுரி வார்க்கேற்ற காலம்—விரவக்
கரிநாளி லொன்றந்தக் கைய ரமணர்
ஒருசூழ்ச்சிக் குற்றடுத்த வொன்று"

இத்தகைய இரவில் சமணர்கூடிப் பின்வருமாறு யோசிக்கலாயினார்கள். "அரசன் மெச்சும்படி நமது மந்திரப் பிரதாபத்தை மதிப்பாகப் பேசிவந்தோம், மந்திரத்தைத் தந்திரமாக வைத்துக்கொண்டு மற்றவர்களை யேமாற்றி வருகிறோம். மந்திரத்தின் பெருமை நமது மனத்துக்குத் தெரிந்ததே. இப்பூடகம் வெளிப்படாமல் காரியத்தை முடிக்க யோசனை சொல்லுங்கள்" என்று அவர்களில் ஒருவரெழுந்து சொன்னார்.

"மந்திரத்தை பழித்துக் கூறவும் ஆயிற்றோ? பார். இவனை முன்னே சுட்டுப்பொசுக்குகிறேன். மற்றது அப்புறம் ஆகட்டும்" என்றார். மற்றொருவர்,

"ஏன் அந்தரவீச்சு வீசுகிறீர். யாரிடத்தில் இந்த வீச்செல்லாம்?. நிறுத்தும். தாய்க்கொளித்த சூலுண்டா?" என்றார். பினனொருவர்.

"மந்திரத்தாலோ தந்திரத்தாலோ வந்தவர் மடம், வெந்தழிய வேண்டியது. மார்க்கம் சொல்லுங்கள்." என்றார் மற்றொருவர்.

"காற்றடிக்கும் வேளைபார்த்து மடத்தில் நெருப்பிட வேண்டியது தான் மார்க்கம்." என்றார் ஒருவர்.

"கொல்லாவிரதம் பூண்ட நல்லோர் அல்லரோ நாம்?" என்றார் ஒருவர்.

"தலைதப்புகிறது தம்பிரான் புண்ணியமா யிருக்கையில் சாத்திரம் படிக்கிறீரோ?" என்றார் ஒருவர்.

"தலைக்குவந்த தலைவலி யென்னோ?" வென்றார் ஒருவர்.

"சொன்னது பலிக்காவிடில் சும்மாவிடுவானோ" அரசன்?" என்றார் சிலர்.

"சொல்லாமற் புறப்பட்டுச் சொந்த ஊர் போய்விடுவது நலம்." என்றார் ஒருவர்.

"சொந்தவூர் எந்த ஊர்?" என்றார் ஒருவர்.

"சொந்த ஊர் ஒன்றுண்டென்றே சொல்லுங்கள்! தப்பியோடச் சாத்தியமா? மன்னவன் பிடித்து கழுவுக்கும் கழுகுக்கும் இரையாக்கி விடானோ?" என்றார் சிலர்.

"கொல்லா விரதங் கற்ற கோமானன்றோ?" என்பார் சிலர்.

"துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் அரசாட்சி முறையன்றோ" என்றார் சிலர்,

இத்தனை தீங்குக்கும் இடங் கொடாது யாம் செல்லியபடி தீயை யிடலே சரி என்றார் வேறு சிலர்."

இனி தாமதஞ் செய்தால் நாமத மாவோம். செய்ய வெண்ணியதைச் சீக்கிரம செய்வதே தரும் என்று" கடைசியாய்த் தீர்மானித்து.

" காலிற் படுசிலன் கட்டப்படும் என்று
பீலிகட்டிச்செல்லும் பெரியரெலாம்"

எழுந்து ஐயர் மடத்தில் வெய்ய தீயிட்டு ஓடிமறைந்தனர். இட்ட தீப்பற்றி யெரியக்கண்ட சண்பை வேந்தர் தமது அடியர் குழாத்துடன் 'யாதும் தீதுறாமல் மடத்தை விட்டு வெளியே வந்து' 'இது சமணர்செய்த சழக்கென்று அறிந்தும்,"எய்தவனை நோகாமல் அம்பை நொந்தாவது என்ன?"என்று எண்ணி,"இந்த வெய்ய வெப்பம் பையவே சென்று பாண்டியற் காகவே" என்று பணித்தார். இச்சமயம் கூ கூ வென்று கோழிகள் கூவின, கா, கா என்று காகங்கள் கத்தின. ' ஓகோ வென்று ஓடிவந்து குதித்தான் சூரியன். ஆ!ஆ! நங்குலத்துதித்த மாது வாடிது கொதிக்கும்படி செய்த கொடியர் எங்கே எங்கே என்று தேடுவான் போலச் செங்கரத்தை நீட்டினான் அவன். ஐயர் எண்ணியது போலவே வெய்யவனும் எண்ணியவனாய் செய்தவர்களைத் தேடுவதை நிறுத்தித் தென்னவன் பக்கலடுத்தா னயினான். ஐயரேவிய வெப்பமும் ஆதித்தன் வெப்பமும் சேர்ந்து அரசனை வாட்டாது வாட்டியது.

"சாகின்றேன் என்றான் தனதுபதி ஐயர்மடம்
வேகின்ற தென்றுசிலர் விண்டு நின்றார்"

வந்தவர் ஒருவருக்கும் தொந்தரை யில்லையெனக் கேட்டுப்போகின்றேன்"என்று புறப்படுகின்ற தனதுயிரைப் போகாதே யெனப் பிடித்துக்கொண்டு நிற்கின்றார் அம்மை மந்திரியார் ஓடிவந்தார். மனனிலைமை கண்டார். வந்தவர் மடம் வெந்தது கேட்டார், யாது செய்வார்? மரம்போல நின்றார். (இன்னும் வரும்)

ஐ. சாமிநாத முதலியார்.
Aj. Sub Asst. Inspector of Schools, Tanjore.

உ

# *இல்லறம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டா மாமலரா
ளேக்குண்டா மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

அறம் இல்லறம் துறவறம் என இருவகைப்படும். அவற்றுள் இங்கு கூறுவது இல்லறமே. இஃது, இல்வாழ்க்கைக் கண்ணின்று செய்யும் அறம் எனப்பொருள்படும்.

இவ்வில்லறத்தைக் கடைபோகச்செய்து முடிக்கவேண்டின் நற்குண நற்செய்கைகளையுடைய மனைவி பூர்வஜந்ம புண்ணியவசத்தால் அமைந்திருக்க வேண்டும். இன்றேல், இரண்டு மாடுகள் பூட்டப்பெற்ற ஓர் சகடமானது அவ்விரண்டு மாடுகளும் ஒற்றித்து இழுப்பின் அன்றிச் செல்லாவாறுபோலவும், இரண்டு கண்களும் ஒற்றித்து நோக்கினன்றிப் பொருள்கள் புலப்படாவாறு போலவும் கணவன் மனைவி என்ற இருவரும் மனம் ஒற்றித்து நிற்பினன்றி இல்லறம் செவ்வனே நடைபெறாது.

பிரமசரியம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்கின்ற மூவகையாசிரமத்தார்க்கும் கிருகஸ்தாச்சிரமிகளே ஆதாரவாயுள்ளவர்களாவார். இதனை "இல்வாழ்வானென்பா னியல்புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை" என்னும் பொய்யில் புலவர் திருவாக்கான் அறிக.

கிருகஸ்தாச்சிரமிகள் செய்யவேண்டிய அறங்களாவன:— பசியாற் களைப்புற்றுத் தம்மை யடைந்தவர்க்கு உணவளித்தலும், ஆடையின்றிக் குளிர் முதலிய வற்றினால் வருந்துவோர்க்கு ஆடை கொடுத்தலும், நோய் முதலிய வற்றாற் பீடிக்கப்பட்டு வருந்துவோர்க்கு மருந்து முதலியன வுதவி அவர் நோயை நிவிர்த்தி செய்தலும் பிறவுமாம்.

கணவன்சொற் கடவாத கற்புடைப்பெண்டிரை யடைந்தானெவனோ அவனே இல்வாழ்க்கையின் பயனை யடைவான். மற்றையன் பூனையின் வாய்ப்பட்ட எலி போன்றும், பாம்பின் வாய்ப்பட்ட மீதேரைபோன்றும் நின்று அலமருவன. முற்காலத்து விருந்தாய்வந்த ஔவைப்பிராட்டியாரை உபசரிக்கப் புகுந்தா னொருவன் தன் மனைவியாற் பட்ட பாட்டை அப்பிராட்டியா ரொரு கவியால் வருணித்திருக்கின்றார். அச்செய்யுள் ஈண்டு நோக்கத்தக்கதாம். அது வருமாறு:—

---

* இது சொக்கலிங்கம்புத்தூர் ஸ்ரீ மாணிக்கவாசக வித்யாசாலையின் வருஷோத்ஸவ தினத்தன்று வாசிக்கப்பட்டது.

"இருந்த முகந்திருத்தி யீரோடு பேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்பத்—திருந்திழையாள்
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தாற்
சாடினாளோடோடத் தான்"

இங்ஙனம் கொடுமைவிகளாயுள்ளாருடன் கூடிவாழ்தலினும் தனியாயிருக்கும் சந்யாசமே நன்று. ஆகலானன்றோ,

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக விருப் பாளே யாமாகிற்
கூறுமற சந்யாசங் கொள்" என்றார் பெரியோர்.

துறவறத்தார்கள் தாங்களும் பசித்துப் பிறர்பசி நோயையுந் தீர்க்கின்றார்களில்லை. இல்லறத்தார்களோவெனின், தாங்களும் பசியாது வயிறார உண்டு, தம்மை யடைந்தவர்கள் பசிநோயையும் நீக்குகின்றார்கள். ஆகலாற் றுறவறத்தாரினும் இல்லறத்தாரே மேம்பாடு உடையர்

இனி, மணவினைக்காலத்து நின்னையல்லாமற் பிறமாதரைக்கனவினும் நினையேன் என்று மந்திரபூர்வமாகப் பாணிக்கிரஹகணம் செய்த மனைவியை பிறமாதரை யிச்சியாதிருத்தல் வேண்டும். அன்றியும்.

"வரையா நாளின் மகப்பேறு குறித்துப்
பெருநலந் துய்க்கும் பெற்றிமேவித்
தன்குலம் வளர்க்கத் தக்கதோர் புதல்வனைச்
சிந்தை யன்பொடு தந்தளித்திடல் கடன்."

இல்லறத்தார்கட்குப் பிள்ளையில்லாவழி அவர்கள் பெருவாழ்வும் வாழ்வனவாம். இதனைப்

"பொன்னுடையரேனும் புகழுடையரேனுமற்
றென்னுடையரேனு முடையரோ—வின்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்" என்பதாலறிக

கணவன்சொற் கடவாத கற்புடைய பெண்டிரை யடைந்தார்க்கே இல்லறத்தின் பயன் கைகூடும். அறமெல்லாவற்றுள்ளும் மேம்பாடுடையது இல்லறமாகையால் நமது ஒளவைபிராட்டியாரும் "இல்லறமல்லது நல்லறமன்று" என்றனர்.

ஆதலால் இவ்வாறுய இல்லறத்தை மனைவி மேற்செய்யப்படும் அன்புடையாராய்த் தத்தம் பொருள் அளவிற்கேற்பச் செய்துவரில் உய்தி பெறலாம். சுபம்! சுபம்!!

நா. பழ. நாகப்பன்.

# மலேரியா என்னும் விஷ ஜுரம்.

சர்க்கார் பிரசுரம்.

(180-ம் பக்கத் தொடர்ச்சி)

—:o:—

அவை குறைந்தது அரை அங்குலம் ஆழமுள்ள தண்ணீரில் ஜீவிக்கின்றன; அதனால் அவைகள் பூர்த்தியாய் வளர்ந்து தலை கீழாய் மிதக்கும்போது, நீரின் அடிப்பாகத்தைத் தொடாமலிருக்கின்றன.

புழு தசையிலிருக்கும் அனோபீலன் ஜாதியைச்சேர்ந்த கொசுகுகளை, அவைகள் நீர் மட்டத்துக்கு அடியிலேயே தட்டையாய்ப் படுத்திருப்பதையும் தள்ளித்தள்ளி பின்பக்கமாய் அசைவதையுங் கொண்டு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் ஜாதியைச் சேர்ந்த கொசுகுகள் நீரில் தலைகீழாய்த் தொங்குகின்றன; அவைகளுக்கு நீண்ட சுவாஸக் குழாய் இருக்கிறது; அவை நெளிந்து புரண்டு முன்னுக்கு அசைந்து செல்லும்.

மேற்கண்ட புழு தசையிலாவது அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலாவது அவைகளின் பூரணமான பரிமாணத்துக்குச் சரியாய் வளர்வதற்கு ஆறு முதல் பத்து நாள் வரையில் செல்லும்; சில சமயத்தில் அதைவிடக் குறைந்த காலமும் செல்லும். அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் அவை வளர்ந்துவிட்டால் அவை திடீரென்று தங்கள் தோல்களிலிருந்து வெளிப்பட்டுத் தண்ணீரில் அங்குமிங்கும் தள்ளிக்கொண்டு முற்றும் புதிய பூச்சிகளாய்க் காணப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு ப்யூபே (Pupæ) அல்லது நிம்புகள் (Nymphs) என்று பெயர். இந்த தசையானது இரண்டுநாள் முதல் நாலுநாள் வரையில் இருக்கிறது. பிறகு அவைகள் தண்ணீரின் மேற்பாகத்தில் மிதந்துகொண்டிருக்க, அவற்றிலிருந்து கொசுகானது இறக்கைகளுடன் கூடிய வயது வந்த பூச்சியாக வெளிப்படுகின்றது; இந்தக் கொசுகு முழுவளர்ச்சியுடைய தாய் இருவேளை உணவு கிடைத்தவுடனே தன் இனத்து ஜந்துக்களை உற்பத்திசெய்வதற்கு லாயக்கமாயிருக்கும். மூன்று நான்கு தினத்தில் அது நீரில் தன் முதல் வரிசை முட்டைகளையிட்டு இன்னும் அதிக

மான முட்டையிடுவதற்காக அதிக இரத்தம் உறிஞ்சும் பொருட்டு இராக்காலத்தில் புறப்பட்டுப் போகும்.

வீடுகளில் எவ்விதமாகவாவது சேர்த்துவைக்கப் பட்டிருக்கிற தண்ணீரிலும், குட்டைகளிலும், தொட்டிகளிலும், சாக்கடைகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும், வாய்க்கால்களிலும், சகல விதமான தண்ணீர்க் கால்வாய்களிலும், கொசுகுகள் உற்பத்தியாகக் கூடும். குறைந்தபக்ஷம் அரை அங்குலம் ஆழம் தண்ணீர்த் தேக்கமிருந்தாலொழிய அவைகள் தூறுகள், க்ரோடன்கள், புஷ்பத்தொட்டிகள் முதலியவைகளில் உற்பத்தியாகமுடியாது.

தண்ணீர்ப் பாத்திரங்களை மூடிவைப்பதனால் வீடுகளிலாவது வீடுகளின் சமீபத்திலாவதுள்ள தண்ணீரில் கொசுகுகளைச் சேரவொட்டாமல் தடுப்பதும், வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் சேரவொட்டாமல் தடுப்பதும், மிகவும் முக்கியமானவையாகும. தண்ணீர் தங்கக்கூடிய உடைந்துபோன பழஞ்சட்டிகள், கெரோஸின் எண்ணெய் டப்பிகள், உடைந்துபோன புட்டிகள், முதலியவைபோன்ற அநாவசியமான எந்த சாமான்களையும் வீடுகளிலிருந்து ஒழித்துவிடவேண்டும். வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் தேங்கியிருக்கும் குட்டைகள் எந்தப் பள்ளங்களில் ஏற்படுகின்றனவோ அவைகளைத் தூர்த்து அடி குட்டைகளை எல்லாம் எடுத்துவிடவேண்டும்; குட்டைகளைத் தூர்த்துவிடமுடியாத இடங்களிலே, தண்ணீரின் மேல்பாகத்தில் சிறிது (மேல்பாகத்தின் ஒரு சதுரகஜத்துக்கு தேத்தண்ணீர்க் கிண்ணியில் அரை அளவுள்ள) கெரொஸின் எண்ணெயை வாரத்துக்கு இருமுறை ஊற்றவேண்டும். இதனால் புழு தசையிலுள்ள கொசுகுகளெல்லாம் செத்துப்போம். வீடுகளிலுள்ள கொசுகுகளில் சில ஏற்கனவே விஷஜுரத்தின் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெற்றிருக்கக் கூடுமாகையால், அக்கொசுகுகளெல்லாவற்றையும் முயன்று கொல்வதே விவேகமான காரியமாகும்.

(இன்னும் வரும்.)

# மாலினீ மாதவம்.

(229-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

திம்மன்:—(குலுங்க நகைத்துக்கொண்டு) "ஓஹோ! கிட்ண ராசரே! நீரு மஹாராசாவாயிட்டீங்களோ! அதுதான் ஒரு முழம் கொம்பு, கூட இத்தனை முளைத்திருக்கிங்க!" என்று பரிஹாஸமாய்ப் பேசினான். கிருஷ்ணராஜன் முகத்தில் களையே குன்றிவிட்டது.

அருகில் சிம்மக்குட்டிபோல் கோபாவேசத்துடன் நிற்கும் தினகரன், தன் உடைவாளை உருவி 'கிறு, கிறு' வென்று சுழற்றித் திம்மன் மார்புக்கு நேராகப் பிடித்துக்கொண்டு, அடே, தேவ! நீங்களிருவரும் அக்கிரமமாய், யாதொரு மரியாதையும், பயபக்தியுமின்றி இவ்வறைக்குட்பிரவேசித்ததுமல்லாமல், மரியாதைத் தப்பாய்ப் பிதற்றவும் துணிந்தீர்கள்! இந்தக்ஷணமே நீங்கள் இவ்வறையை விட்டு வெளியேறாவிட்டால் உங்களிருவரையும் இக்கத்திக்கிரையாக்கி விடுவேன்" என்று கோபாவேசத்துடன் கர்ஜிக்க,

தலைவர்கள் எழுந்து தங்கள் தடிகளைத் தலைக்குமேலே சிலம்பம் ஆடுவதுபோலச் சுழற்ற ஆரம்பித்தார்கள்.

இதற்குள் பாலூர் மகாராஜா இவ்விருதிறத்தாரையும் தடுத்து நல்லவார்த்தைசொல்லிச் சமாதானம் செய்தார். மணிபுரம் ஜமீன்தார் யாதொன்றும் தோன்றாதவராய், மந்திரத்தால் கட்டுண்டவர் போலச் சோபாவில் சாய்ந்தபடியே அக்கொடுங்காட்சியைக் கண்ணுற்றுக் கற்சிலைபோல் அமர்ந்திருந்தார்.

"சரி! பார்த்துக் கொள்ளுவோம்!" வாடா போவம்பி!' என்று தன் தம்பியை யழைத்துக்கொண்டு, திம்மன் திடீரென்று அவ்வறையைவிட்டு வெளியேறிச் சென்றான். மற்ற மூவரும் யாதொன்றும் சொல்லத் தோன்றாதவர்களாய், "இதென்ன விபரீத ஸம்பவம்! இது கனவுபோலத் தோன்றி மறைந்ததே!" என்று மனத்தில் லடைந்தார்கள்.

இந்நிலைமையில் "ஐயோ! ஐயோ!" என்ற சப்தம் உத்யானவனத்திலிருந்து கிளம்பிற்று. 'இஃதென்ன! கமலாவின் சப்தமல்லவா!" என்று அறிந்து அச்சப்தம் வந்த திசை நோக்கி மூவரும் விரைந்

தோடி உத்யானவனம் வந்து, "என்ன?" வென்று கமலாவை விசாரித்தார்கள்.

கமலா:—"ஐயோ!பாவிகள் நமது மாலினியை பலாத்காரமாய்க் குதிரை மீது ஏற்றிக்கொண்டு மேற்குத்திசை நோக்கிச் செல்லுகிறார்களே! ஐயோ! ஐயோ! என்று விம்மி விம்மிக் கதற ஆரம்பித்தாள. ஒருக்ஷணநேரங்கூடத் தாமதிக்கவாவது 'இன்ன செய்வதென்று யோசிக்கவாவது அவகாசமில்லை.

மணிபுரம் ஜமீந்தார்:—"சேனை! கொண்டுவா குதிரைகளை. நமது புலிக்குத்தி வீரன்களையனுப்பி அந்தோ ஓடுகிறான்களே அவன்களைப் பிடிக்கச்சொல்" என்று ஆக்ஞாபிக்கச் சிறிது நேரத்துக்குள் ஜேணம் பூட்டிக்குதிரைகள் தயாராய் வந்து சேர்ந்தன. தினகரன் ஓர் துரகத்தில் பாய்ந்து ஏற மணிபுரம் ஜமீன்தாரும் மற்றோர் குதிரை மீது ஏறிக்கொண்டார். உடனே புலிக்குத்தி சிப்பாய்களில் 20 பேர்கள் துரகாரூடராய்த் தடிகளையும் கத்திகளையும் ஏந்திக்கொண்டு வந்துசேர்ந்தார்கள். இதற்குள் தலைவர்கள் மாலினியைத் தூக்கிக்கொண்டு அரைமயில் தூரம்வரைபோய்விட்டார்கள். அவர்கள் பக்கத்திலும் 20 ஆட்கள்வரை யுத்தஸந்நத்தர்களாய் வந்திருப்பதாய்த் தெரிந்தது.

மணிபுரம் ஜமீன்தாரின் சிறு சைன்யமானது தலைவர் சைந்நியத்தைத் துரத்திக்கொண்டு புறப்பட்டது. ஆனால் துரத்துபவர்கள் குதிரைகள் உயர் இனமானதால், வேகமாய்ச்செல்லவே, கடைசியாக தலைவர் சைந்நியத்தை அநேகமாய் நெருங்கிவிட்டார்கள்.

கடைசியாய்த் தலைவரிருவரும் திரும்பிப்பார்த்து இனி ஓடுவதில் பயனில்லையென்று உணர்ந்து, தங்களில் அதிக நம்பிக்கையுள்ளவர்களும், அதிக பலசாலிகளுமான மூத்தன் பெத்தன் என்ற இருவர்களிடமும், மாலினியை ஒப்புவித்து, 'நீங்கள் ஜாக்ரதையாய் கோட்டைபோய்ச்சேருங்கள்' என்று அனுப்ப அவ்விருவர் மாத்திரம் மாலினியைத்தூக்கிக்கொண்டு, மற்றவர்களிடமிருந்து பிரிந்து அதிவேகமாய்க் கோட்டை நோக்கிச் சென்றார்கள்.

உடனே, திம்மன் மற்றவர்களை நோக்கி "அடேடே! பயன்களா! நம்ப கருப்பன் ஆணை! உயர்போனாலும் போகுது. இந்தப்

பயல்களை விடாதேயுங்கள்" என்றுகர்ஜிக்க, மற்றவர்கள் திடீரென்று திரும்பி நிற்கவே, ஜமீன்தார் சைந்நியமும் வந்து எதிர்த்தது. இக்கூட்டத்தில் மாலினியைக் காணுததினுல், ஜமீன்தாரும் தினகரனும் நாற்புறமும் திரும்பிப்பார்க்கவே சற்று தூரத்தில் இரண்டு குதிரை வீரர்கள் பலாத்காரமாய் மாலினியைச்சுமந்துச் செல்வதையும், மாலினி கதறுவதையும் கண்டார்கள். "இப்போது இவர்களுடன் சண்டை செய்தல் தகுதியல்ல, மாலினியை மீட்கவேண்டியது தான் முதற்கடமை" யென்று ஆலோசித்து, தலைவர் சேனையைக்கடந்து செல்ல ஆரம்பிக்கவே, அவர்கள் அவ்வாறு செய்ய முடியாமல் தலைவர் சேனை தடுத்துவிட்டது. இருண்ட நுழைகாடானதாலும், அந்திப்பொழுதானதாலும், வேறுபாதைவழியாய்ப் போகவும் முடியவில்லை. சண்டைநடந்தே தீரவேண்டியதாய் நேர்ந்துவிட்டது. உடனே இருதிறத்தாரும் சிலம்பம் பழக ஆரம்பித்தார்கள். சில குதிரைகள் வெருண்டோடி தங்கள் மீதுள்ளோரை மரங்களில் மோதித் தள்ளிவிட்டு, ஓடிப்போய்விட்டன. சிலர் மண்டையில் காயப்பட்டுக் கீழே வீழ்ந்தார்கள். தினகரன் அதிவேகமாய்த்தாண்டி பொம்மனைத்தாக்கவே, அவன் கத்தி, பொம்மன் குதிரையின் காலைச் சேதிக்கப் பொம்மன் கீழும், அவன் குதிரை மேலுமாய்ப் புரண்டார்கள். இதற்குள் நாலுபேர்கள் ஓடிவந்து தினகரனைத் தகைய அதற்குள் பொம்மன் எழுந்து இவை மொரு குதிரை மீது ஏறிக்கொண்டான்.

இவர்கள் இந்நிலைமையில் இருக்கையில் நமது மாலினியின் கதியைக் கவனிப்போம்: முத்தன் தன் குதிரைமீது மாலினியை ஏற்றிக்கொண்டு முன்செல்ல, பெத்தன் பின்னுல் பாதுகாத்துக்கொண்டு, இருவரும் 'ஓடடா! ஓடடா!' என்று கோஷித்துக்கொண்டு அதிவேகமாய்க்குதிரையை தூண்டிச் செல்லுகிருர்கள். அநேகமாய் மலிபுரம் எல்லை வந்துவிட்டார்கள்.

"இனி யென்ன பயமடா நம்ம எல்லை வந்தூட்டோம்" என்று முத்தன் உரக்கக்கூவினுன். மாலினியோ 'ஐயோ! ஐயோ!' என்று கதறுகிருள். "ஏண்டியாத்தே! சும்மாதானே!" எனறு பெத்தன் சொல்ல, இருவரும் பின்னே திரும்பிப்பார்த்து யாதொருவரும் தொடரவில்லை யென்று அறிந்து பயம் நீங்கி, யதிவேகமாய்க் குதிரைகளை ஓட்டினுர்கள்.

இந்நிலைமையில் பக்கத்துப் புதரிலிருந்து திடீரென்று ஓர் ஆண் உருவம் தோன்றவே, முன்சென்ற குதிரை, சற்று வெருண்டது. ஓர் தடி, 'கலகல'வென்று சுழன்று குதிரையின் முன் காலில் விழவே, குதிரை கால்கள் ஒடிந்து மண்டிபோட்டுக் கீழே விழ்ந்தது. முத்தனும், பெத்தனும், திடுக்கிட்டுத் தம் தடிகளைச் சுழற்று முன்னமே, மாலினீ 'கோ!' வென்று கதறிகொண்டு குதிரையினின்றும் மூர்ச்சையாய்க் கீழே சாயவே, அவளை உடனே மாதவன் தன் இருகரங்களாலும் தாங்கி, தன் மாரில் சாய்த்துக்கட்டிக்கொண்டு, அப்புறஞ்சென்றான். இதற்குள் முத்தன் கீழும்,முத்தன் குதிரை மேலுமாகப் புரண்டார்கள். அருகிலிருந்த நமது பரதேசி, பின் வந்தபெத்தன் தலையில் தன் தடியால் ஓங்கியடிக்கவே, 'ஆத்தே!' என்று அலறிக்கொண்டு பெத்தன் கீழே விழ்ந்தான்.

உடனே பரதேசி பெத்தனுடைய குதிரையின் கடிவாளங்களை பிடித்துக்கொண்டு. "மாதவ! இனி காலதாமதம் செய்யலாகாது! என்னென்ன நேரிடுமோ? சீக்கிரம் மாலினீயை இக்குதிரைமீது ஏற்றிக்கொண்டு,இக்குறுக்குப்பாதையாய, அரண்மனைசெல" என்று ஓர் குறுக்குப்பாதையையும் காட்டினா. இதற்குள் மாலினீயும் மூர்ச்சை தெளிந்தெழவே, தான் மாதவன் மடியிலிருப்பதையும், 'அநாதைக்குத்தெய்வமே கதி'யென்றபடி,தெய்வமே மாதவன் உருவெடுத்துத்தன்னை ரக்ஷிக்க வந்ததுபோல உணர்ந்தாள். "மாலினீ! சீக்கிரம் இக்குதிரைமீ தேறு" என்று மாதவன சொல்ல,

மாலினீ:—(கண்ணீரைப் பெருகவிட்டுக்கொண்டு) "மாதவ! மாதவ! ஐயோ! உன் குரலைக்கேட்டு எத்தனையோ நாளாயிற்றே! ஐயோ! மாதவ! என் மாதவ!" என்று விம்மி விம்மியழுதுகொண்டு மாதவனை இறுகத்தழுவி, அவன் மார்புமீது தன் முகங்களைப் புதைத்துக்கொண்டு கண்ணீரை தாரைதாரையாகப் பெருக்கலானள்.

மாதவன்:—"மாலினீ! இது சமயமல்ல. இருட்டாய் விட்டது. சீக்கிரம அரண்மனை சேரவேண்டும். துஷ்டர் வசிக்குமா றிது காடாயிருக்கிறது, சீக்கிரம!" என்று துரிதப்படுத்தினன.

மாலினீயும் குதிரைமீதேற, மாதவனும் வேகமாய் அதன்மீது பாய்ந்து ஏறி மாலினீயை இடக்கையால் அணைத்துக்கொண்டு, வலக்கையால் லகானைப்பிடித்துச்சாமர்த்தியஞ்செய்து, குதிரையை வேகமாய்த் தட்டிவிட்டான். பரதேசி சற்றுநேரம் பார்த்துவிட்டு, கீழே விழ்ந்த திம்மனும் பொம்மனும் எழுந்திருக்கு முன் காட்டுக்குள் மறைந்தார.

(இன்னும் வரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

# பஞ்சபூதம்.

(220-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, மேல்நாட்டார் இப் பஞ்சபூத விஷயமாய் அறிந்த சில வற்றைக் காண்போமாக.

பிருதுவி சடப்பொருளாயினும், நாளேற நாளேற, "மண்ணே, பொன், வெள்ளி, இரும்பு, வைரம் பவளம் முதலிய வாகிறது" என்றறிவர். "ஆகர்ஷணம்" அதாவது மற்றொன்றைத் தன்பால் இழுக்கிற சக்தி பூமிக்கும் உண்டென்பர். அதனாற்றான் ஓர் கல்லை ஆகாயத்தில் எறிந்தால் அது பூமிக்குத் திரும்பி வருகிறது. இப்பூமிக்கு இவ் வொரு சக்தியில்லா விட்டால் நாமும் இறக்கை இல்லாமலே, பட்சிகளைப்போல, நினைத்தபடி பறந்து செல்லலாம். சந்திரன் செவ்வாய் முதலிய கிரகங்களுக்கும் போய் ஆங்காங்குள்ள விசேடங்களை அறியலாகும். நமது வீடுகளை ஆகாயத்தில் நினைத்த இடத்தில் திரிசங்கு சுவர்க்கம்போல் கட்டிக்கொள்ளலாம். நம்மை அடக்கி ஓர் இடத்துக்குள் வைப்பவர் இன்றாகும். மழை காற்று இவற்றால் கட்டிடங்கள் இடிந்துபோவதும், அதனால் வரும் உயிர்ச்சேதமும் இலதாகும். இப்படிப்பட்ட பல நன்மைகளை நாம் அடைதற்கு இந்த "ஆகர்ஷண" சக்தியானது தடையா யிருக்கிறதன்றோ?

"இத் துணைத்தடை செய்வதாக காணப்படும் அச்சக்தியால் நன்மைதான் என்ன?" என்று பார்க்குமிடத்து நமது தாயுமானவர்போல் நாமும் வியக்கற்பாலதேயாம். அவர் "அந்தரத் தகிலகோடி தாழாமல் நிலை நிற்கவில்லையோ?" என் றதிசயித்தனர். இவ் வொரு சக்தியிலதேல் சூரியனைச்சுற்றி கிரகங்கள் ஓடுவதொழியும். பூமியும் தன்னைத்தினம் சுற்றி "நாளென வொன்றுபோல்" எங்ஙனம் காட்டும்? சூரியனைசுற்றி பூமி வருவதினால் காணப்படும் வருடக் கணக்கேது? சூரியனைவிட்டு பூமி எங்கேயாவது ஆகாச வீதியில் செயலற்று கிடக்கும். கிடக்கில் சூரிய வொளியின்றி உயிர் எவ்வாறு நிலைக்கும்?

"பூதங்க டோறுநின் றாயெனி னல்லால்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைக்.

சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னு
சிந்தனைக் குமரி யாயெங்கண் முன்வந்
தேதங்க ளறுத்தெம் மையாண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி யெழுந்தரு ளாயே"

என்ற திருவாசகக் கருத்தும் இச்சக்தியைக் காட்டி பூதநாதன் என்னும் பெயரையும் விளக்குவதாகும்.

இன்னும் இப்பூமியில் மின்சாரசக்தியானது வேறொன்றுண்டு. எனினும், அதுவும் முன்சொன்ன சக்தியின் திரிபாய் அதுதான் என்பது நிபுணர்கள கொள்கை. இம்மின்சாரமானது திசைகாட்டும் ஊசியை (Compass) வடக்கையே காட்டி நிற்கச் செய்வதும் எமது சிவபிரானது "கைலாஸம் வடக்கு" என்னும் பழையசொல்லை நிலைநிறுத்தல்போலும்.

இனி நீரின் செய்கையைசசிறிது ஆராய்வோம்:—

"நாழி முகவாது நானாழி" என்பதைத்தான் ஆங்கிலர்கள் 'Non-Compressible"(சலத்தை அமுக்கிச் சிறிதாகச் செய்யப்படா)தென்பார்கள். நீரிற்குள்ள இச்சக்தியைக்கொண்டுதான் "Brahma Press"முதலியன செய்திருக்கிறார்கள் இன்னும் நீர்மட்டம்சரியான மட்டம் என்பார்கள் "Water finds its level" அஃதுண்மை இன்மையாயின் "பள்ளந்தாழ் உறுபுனல்" என்ற பெயரும் பொருந்தாது. மலையிலிருந்து ஜலம் ஆறாகவருவதெங்ஙனம்? ஆறில்லையேல் "தானந்தவ மிரண்டுந் தங்கா வியனுலகம்" என்பதுஉண்மைப்படும். இஃது இவ்வாறு நிற்க. நீர்மட்டம் நேர்மட்டமாயின் பூமி உருண்டை வடிவென்றும் அப்பூமியைச்சுற்றி நீர் உள்ளது என்ற போதும் நீரும் உருண்டை வடிவம் பெறுமாதலால் யாங்ஙனம் அவர்கள் சாற்றும் நீர்மட்டம் ஒக்கும்? இதற்குச் சான்று பூமி உருண்டை என்பதற்கு அவர்கள் எடுத்துககொண்ட "நெடுந்தூரத்திலிருந்து வரும் கப்பல் தோற்றமே"யாம். ஆதலால் நீர்மட்டம் என்றபோது அறிவில் "நீர் மட்டம்" (நீங்கள் குறைந்தவர்கள்) என்பதுதான் பொருத்தமாக நிற்கும். (இன்னும் வரும்)

**C. S.** முத்துசாமி ஐயர்,
*Hd. Tamil Pandit, Wesleyan Mission High School, Negapatam.*

# மூத்ரா ராக்ஷஸம்.

(223-ம் பக்கத்தொடர்ச்சி)

14. எஜமானன் செல்வவானாயும் நல்ல நிலைமையிலும் இருக்கையில், பொருளாசையால் அவனைப் பரிஜனங்கள் ஸேவிக்கின்றார்கள். எஜமானனுக்கு ஆபத்து நேரிடினும் மறுபடி நல்ல நிலைமையடையலாமென்ற ஆசையால் அவனை யனுசரிப்பவர் சிலர். ஆனால் எஜமானன் நாசமடைந்த பிறகும், அன்னவன் முன் செய்த நன்றி மறவாமல் வேறு பயனெதிர் பாராது அவனிடத்துள்ள அன்பால் அவன் கார்ய பாரங்களை வகிக்கும் நின்போன்ற உத்தம குணர்கள் உலகில் மிக அரிதே! ஆகையால் தான் உன்னை நமது வசப்படுத்த முயல்கின்றோம். இந்த ராக்ஷஸனை எவ்விதம் நமது சந்த்ரகுப்த மகாராஜனுடைய மந்திரி உத்யோகத்தை வஹிக்கச் செய்வது? எப்படியென்றால்—,

15. ராஜபக்தி யுள்ளவனாயினும் மூடனாகவாவது, பயந்தவனாகவாவது இருந்தால் அவனால் என்ன பயன்? புத்தியும் பராக்ரமமுமிருப்பினும் ராஜ பக்தியில்லாதவனால் என்ன பயன்? ஆதலால், புத்தி, பராக்ரமம், பக்திபாகிய இம் முக்குணங்களும் வாய்ந்தவனே வறுமையிலும், உயர்விலும் அரசனுக்குத் தக்க ஸேவகன். மற்றவர்கள் அலங்கார மாத்திரமே! ஆகையால் இக்காரியம் கைகூடு மளவும் யான் ஒருககாலும் துயில் கொள்ளேன். இராக்ஷஸனை நமது கைவசப்படுத்துவதற்குக் கூடிய முயற்சி செய்கின்றேன், எப்படியென்றால் —

விருஷனன், பர்வதகன் இவர்களுள் யாரையாவது கொன்றுவிட்டால் சாணக்யனுக்கு ஏதோ தீங்குசெய்து விடலாமென்ற கெட்ட எண்ணத்துடன் ராக்ஷஸன், விஷகன்னி மூலமாய், பாவம்! நமது பரமோபகாரியான மித்திரன் பர்வதனைக் கொன்றுவிட்டானென்று உலகத்தில் ஓர் அபவாதம் பரவச்செய்துவிட்டேன். இவ்வபவாதத்தைத் தெளிவாய் உலகத்தார் உண்மையென்று நம்புமபொருட்டு, அப்பர்வதக புத்ரனான மலயகேதுவை "உன் தகப்பன் சாணக்யனால் கொல்லப்பட்டான்" என்று பாரோயணன் ரஹஸ்யமாய்ப் பயமுறுத்தி துரத்திவிடச் செய்தேன். ராக்ஷஸனுடைய புத்தி வல்லமையின் உதவியால் இம்மலயகேது (நமக்கு விரோதமாய்க் கிளம்பினாலும், நமது புத்தித் திறமையால் அவனையடக்கி விடலாம். ஆயினும் இப்பொழுது இம்மலயகேதுவைப் பிடிப்ப

தால், பர்வதகன் கொலையினின்று ராக்ஷஸன் பேரில் பரவும் லோகா அபவாதமானது நீங்கிவிடுமாதலால், அவ்வாறு யான் செய்யமாட்டேன்.

நமது பக்கத்திலும், எதிரிகளின் பக்கத்திலும் யார் யார் அபிமானமும், விரோதமும் பாராட்டுகின்றார்கள் என்பதை யறியும் பொருட்டு, நானாதேசங்களையும், உடை, பாஷை, ஆசாரம், நடத்தைகளையுமறிந்த சாரணர்களைப்பல வேடம் பூண்டு ஸஞ்சரிக்கும்படி யனுப்பியிருக்கின்றேன். குஸுமபுரத்தில் வசிக்கும் நந்த ராஜ வம்சத்து மந்திரிகள், அபிமானிகள், கபடமாய்ச் செய்துவரும் காரியங்களையும் கவனித்து வருகின்றேன்.

சந்திரகுப்த மஹாராஜனால் நல்ல பதவியடைந்தவர்களும், அப்பதவிக்கு அமமகாராஜனுடைய பதவியே காரணமாயுடையவர்களுமான, பத்ரபடன் முதலான அந்தரங்க விசுவாஸமுடையவர்களுக்கு ஒவ்வொரு விதமான ஆசை காட்டித் திருப்தி செய்து கொண்டிருக்கின்றேன்.

கொடும் விஷம் ஊட்டும்படி பகைவர்களால் ஏவப்பட்டவர்களின் எண்ணம் நிறைவேறாது காக்கும்பொருட்டு, ராஜபக்தியில் சிறந்தவர்களும், மிக்க ஜாக்ரதையுள்ளவர்களும் ஆப்தர்களுமான ராஜ புருஷர்களை ஆங்காங்கு ராஜ ஸமீபங்களில் அரசனைப் பாது காக்கும்பொருட்டு நியமித்திருக்கின்றேன்.

தவிரவும், நமக்கு சகாயமாக, நமதுகூடப் படித்தவரும் மித்ரனுமான 'இந்து சர்மா' என்ற ப்ராஹ்மணன் இருக்கின்றார். அவரோ 'உசனஸ்' என்னும் மஹரிஷியால் சொல்லபபட்ட ராஜ நீதியிலும், ஜோதிஸ் சாஸ்திரஸ்த்தாலும் அறுபத்து நான்கு கலைகளிலும் மிக்க நிபுணர். நந்த ராஜ வம்சத்தை யழிப்பதாய் யான் சபதஞ்செய்தவுடனேயே, அன்னவரை க்ஷமண ஸந்யாஸி வேடத்துடன் குஸுமபுரம் அழைத்துவந்து நந்த ராஜ வம்சத்து மந்திரிகள் எல்லோருடனும் சிநேகம் செய்வித்தேன். அவர்களில் ராக்ஷஸனுக்கோ அவனிடத்தில் அதி விசுவாஸம். இப்பொழுது அவனால் தான் ஓர் பெரிய உதவி யாகவேண்டும்,

(இன்னும் வரும்.)

R. வேஸதுநாராயண சர்மா B. A. B. L.

# *பெற்றோர்ப் பேணல்.

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதி செயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

"பெற்றோர்ப் பேணல்" என்பது "தன்னைப் பெற்ற தாய் தந்தையரைக் காப்பாற்றுதல்" எனப்பொருள்படும்.

உலகத்துள் எல்லாராலும் வணங்கப்படத்தக்க ஐங்குரவர் ஆவார் இராசா, குரு, தாய், தந்தை, தமையன் ஆகிய இவர்களே. இதனை "அரசன் உவாத்தியான் தாய் தந்தை தம்முன் நிகரில் குரவர் இவர்" என்னும் ஆசாரக்கோவைச் செய்யுளானறிக.

ஐங்குரவரின்பாற் பாட்டாராகிய தாய்தந்தையர்களை யென்றும் பேணிவழிபடல் வேண்டுமென்பது, அவர்கள் செய்திருக்கும் உதவியை உற்றுநோக்குவாருக்குத் தெற்றெனப்புலப்படும். அவ்வுதவிகளனைத்தையும் "மாயிரு ஞால மகிழ்வுறத் தாங்கும் ஆயிர நாவுடை யனந்தற்குங் கூறிமுடிக்க இயலாது. ஆயினும், எனக்குத் தெரிந்தளவு சிறிது சொல்லி நிறுத்துகின்றேன்.

உலகத்தில் தாய்மார்கள் குழந்தைகளைப் பெறுதற்குப் பற்பல தெய்வங்கட்குப் பிரார்த்தனை பண்ணிக்கொள்வதும் பற்பல விரதங்களை யனுஷ்டிப்பதும் வழக்கமாயிருப்பதை யின்றும் நாம் காண்கின்றோம். குழந்தையைக் கருப்பத்திற்றோன்றிய நான்முதல்,

பத்து மாதம சிந்த பிசைந்து
தன்னயம் எணாதுஅதன் இன்னயங் கருதிப்
பொய்த்துயில் கொண்டு புளிக்குழுவந்து
இன்சுவைஅனம் ஒரீஇ இன்னாருந் துயர் நனி
வயிற்றி லிருத்திப் பயிற்றியே வந்த
அம்மைக்குச் செய்யுங் கைம்மா றியாதோ?

இஃதன்றியும் "வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்" என்றதற்குத் தாய்மார் தம்வயிற்றினின்று குழந்தையைத் தோற்று

---

* இது சொக்கலிங்கம் புத்தூர் மாணிக்கவாசக வித்தியாசாலையின் வருஷோத்ஸவதினத்தன்று வாசிக்கப்பட்டது.

விக்குங் கால்அவர் படும்பாடு நம்மாற் சொல்லுந் தரத்ததன்று. நரை, திரை மூப்பு முதலியவற்றிற் கிருப்பிடமாகிய குழந்தையை நூலின் மேல் நடப்பவர் போன்று மிகவும் சாக்கிரதையாகப் பாதுகாத்துவருவர். அங்ஙனங் காவாவிடத்து,

இன்னுதரு நோய் மன்னுறிற்கும். (அஞ்ஞான்று)
நேயின்பொருட்டுத் தாய் மருந்தயின்றும்,
பத்திய முதலிய பத்தியா யிருந்தும்,
நண்ணிய புதல்வனைக் கண்மணிபோல
நினைந்ததற் குறுதுயர்க் கினைந்து வாடி
"ஆனை முகத்தெம் அண்ணல் காவாய்!
முருகா! மாலின்மருகா! காவாய்!
அன்னை வெனுமுக் கண்ணு! காவாய்!
பூரண னென்னும் நாரண! காவாய்!"
என்ன வின்னன பன்னிப் பணிந்து
மன்னிய சிறப்பு வாய்ப் புறச்செய்து
காப்பதற் கியைவர் கருதுதாய் மார்கள். (பின்னரும்)

இன்ன காலத் தின்னது வேண்டுமென்
றெண்ணி யதற்கு நண்ணிய செய்தும்
கால மறிந்து பாலினை யூட்டியும்
தொட்டிலி லிட்டுத் தூங்கச் செய்தும்
அழுமமை யத்துச் செழுமொழி கூறியும்,
காவா நிற்பர் கருணைத் தாய்மார். (அன்றியும்)

ஆடி ஓடித் திரியுமஞ் ஞான்று
மாடு முதலா மற்றைய வற்றாற்
றீங்குற நேரிற் பார்க்கறத் தம்முயிர்
ஈந்து காக்கவுந் தாந்தலைப் படுவர்,
ஓங்கிய அன்பினைத் தாங்குமன் னையர்கள்.

ஆதலா னன்றே நமது மூதாட்டியாகிய ஔவையார், "தாயிற் சிறந்தொருகோயிலுமில்லை" யென்றார். நாம் முதலிற் கண்கண்ட தெய்வமாகக் கண்டது அன்னையை யல்லாற் பின்னைவேறின்று. அவ்வன்னையர்க்கு நம் வாழ்நாள் முழுவதுந் தொண்டுபூண் டொழுகினும் அவர் செய்த நன்றிக்கு ஏகதேசமேனும் ஈடாகாது.

"ஈன்று வளர்த்த தாய்தந்தைக் கெவரே கைம்மா றியற்றிடுவார்?
ஆன்ற மதலை நூறுவய தளவு மடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருள் முற்று மளித்து முறைமுறையே
என்று வழிபா டியற்றிடினும் ஒருநாள் வளர்த்தற் கிணையாதே"

இது நிற்க. இனித் தந்தையர் புரியும் நன்றியைச் சற்று ஆராய்வோம்.

இதழுறிப் பேசுங் குதலைவாய் மைந்தர்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டித்
தன்னகம் புகூஉ மன்னதோர் காலையிற்
"கண்ணின்மணியே! கரும்பே! வா! வா!
எண்ணருந் துயர்நீக் கெந்தாய்! வா! வா!
அன்னாய்! வா! என்அன்பே! வா! வா!
குடிமுழு தாளுங் குழந்தாய்! வா! வா!"
என்றின் னனபல நன்றுறச் சொல்லி
நகுமுக மலர்த்தி யுகமகிழ் வுற்றுக்
கைதனி லேந்திப் பொய்தபு இன்பஞ்
சந்ததங் கொள்வராற் றந்தையர். பின்னும்
மையில் சீர்த்திகல் ஐயாண் டெய்துழி
அறிவின் மாட்சியும் பொறையின் வன்மையும்
துளங்கா நிலையும் வளஞ்சேர் கல்வியும்
உற்றுச் சிறந்த பெற்றிமை யுடைய
ஆசா னிடத்தே யக்ஷராப் பியாசம்
செய்வித் தளமயல் தீர்ப்பிப் பார்கள்
தெய்வ பக்தியையுமும் ஐயன் மார்கள். (அன்றியும்)
நாவினுக் கினிய ஆவின் பாலும்
பண்ணிய முதலா வெண்ணில் பண்டமும்
உண்டியும் உடையும் உவப்பன பிறவும்
மனங்கோ ணாமற் றினந் தினமுதவி
மைந்தர்கள் எய்த அந்தவின் பத்தையுந்
தந்தையர் தமதெனத் தாமகிழ் வுறுவர். (மேலும்)
தக்கதோர் பருவம் புக்க விடத்துத்
கோத்திரம் சூத்திரம் குடிமுதல் வினவி
அழகு முதலா வனைத்தினுஞ் சிறந்த

பெண்ணைத் தத்தம் பிள்ளைகட் கென்று
தேர்ந்து நன்றெ னோர்ந்தலை கறிய
எழில்பெறு கலன்கள் விழையப் பூட்டி
விதிப்படி மணவினை துதிப்பச்செய் வித்து
எவைஎவை விழையினும் நவையறச் செய்வர்
ஒப்பிலா துயர்ந்த அப்பன் மார்கள். (பின்னும்)

எண்ணில் பொருளை யீட்டிப் புதல்வர்க்கு
என்றென் றெண்ணி நன்றுள மகிழ்வார்.
தம்நயங் கருதார். தம்புதல் வர்க்கு
மன்னல மேனல மாமென வாழ்வார்.
இன்னோ ரன்ன தன்மையை யுடைய
தந்தை சொன்மிக்க மந்திரம் யாதோ?

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்றமையாற் றெய்வமாகிய அவர்க்கு, நாம் செய்யத்தகுங் கைம்மாறுவது அவர்உவப்பனசெய்தலே யல்லால் வேறில்லை. தன் மகனைக்கல்வி கேள்விகளால் நிறைந்தானென்று அறிவுடையோர் கூறக்கேட்பின், அஃதே தாய்க்கு மிக்க உவகையை விளைவிக்கத் தக்கது. இதனை "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்பதனானறிக.

தன்னறிவும் ஒழுக்கமுங்கண்டார் 'இவன்றந்தை இவனைப்பெறுதற்கு என்னதவஞ்செய்தானோ!' வென்று சொல்லுஞ்சொல்லை நிகழ்த்துதலே மகன்றந்தைக்குச் செய்யுங் கைம்மாறும். இதனை

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்! என்னுஞ் சொல்"

என்பதனானறிக.

ஆகையால் ஒவ்வொருவரும் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து தம் தம் தாய் தந்தையர்க்குவப்பன செய்து பாதுகாத்துவருவாராக. அங்ஙனம் செய்தால்தான் உலக மாதாவும் பிதாவுமாகிய ஸர்வேசுவரனுடைய திருவருள் பெற்று நீடூழி வாழலாகும். சுபம். சுபம்.

வீர. சு. பழநியப்பன்

# நாட்டுக்கோட்டையாரும் வீடுகட்டுதலும்.

நம்மவர் வீடுகட்டுகிற விஷயத்தில் பெரும் பொருள் செலவு செய்து அனாவசியமாகப் பெரிய பெரிய வீடுகளாகக் கட்டுகிறார்களென்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. அளவுகடந்து பெரிய வீடுகளாகக் கட்டுவது உண்மையில் அனாவசியமேயாகும். வீடுகள் எப்பொழுதும் அடக்கமாகவும் அழகாகவும் இருக்கவேண்டுமேயன்றி வீண் பெருமைக்குக் கண்டபடி விசாலப்படுத்துவது விவேகமன்று. பொருளை விழுங்கிய பூதங்கள் போல் பெரிய வீடுகளால் நன்மை இல்லை: (1) அவற்றில் ஒன்றியாகக் குடியிருப்பதற்குப் பயமாக இருக்கும். (2) சுத்தமாக வைத்துக்கொள்ளவும் இராவில் தீபமிடவும் முடியாது. (3) ஆட்புழக்கமில்லாமற் சில காலமிருந்தால் அவற்றில் வௌவால் அடைந்து நாற்றமுண்டாகும். (4) ஒரு காலத்தில் ஓடு மாற்றவும் முடியாமல் நேரக்கூடும். இப்படிப் பலவிதத்திலும் நன்மையில்லாத விஷயத்திற பெரும் பொருள் செலவு செய்வது வீணான நஷ்டமில்லையா? நம்மவர் கட்டுகிற வீடுகள் பெரும்பாலும் சுகாதாரத்துக்கு முற்றிலும் விரோதமாக இருக்கின்றன. எந்த வீட்டில் காற்றோட்டமும் போதுமான வெளிச்சமும் இல்லையோ அதில் வசிப்பது நோய்க்கிடமாகும். குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்டதுபோல் சௌக்கியத்துக்கென்று வீடுகட்டி நோய்க்காளாகலாமா?

இனி நாம் உள் வீடு வெளி வீடு வைத்துக் கட்டுகிறோம். உள் வீட்டில் சித்திரை மாத வெயிலிற் பகல் 12 மணிக்குப் புகுந்தாலும் கையில் விளக்கின்றி ஒன்றும் செய்வதற்கில்லை. அந்த உள் வீடு வைத்துக்கட்டாவிட்டாலென்ன? எந்த சிற்பசாஸ்திரி அப்படி அபிப்பிராயப்படுகிறார்? ஒரு குடும்பத்தில் நான்கு சகோதரர்களிருந்தால் நான்கு பேரும் ஒன்று சேர்ந்து ஒரு லட்ச ரூபாய் செலவு செய்து பெரிய வீடாக ஒரு வீடு கட்டுவதிலும் அதே செலவில் நான்கு வீடுகளாகக் கட்டிக்கொள்வது எவ்வளவு நன்மையாகும்? எந்த ஜாதியிலும் சகோதரர்கள் ஒரு வீட்டில் ஒற்றுமையாக வசிப்பது மிக அருமை. புருஷர்கள் ஒற்றுமையாக இருந்தாலும் பெண்கள் ஒற்றுமைப் படமாட்டார்கள். பெண்களாற் புருஷர்களும் சில நேரம் மனஸ்தாபப்பட நேரும். தனித்தனி வசிப்பதால் இந்தக் கஷ்டமின்றி ஒற்றுமையாகவும் வாழலாம். ஒருவர் வாழ்வைப்பார்த்து மற்றவர் பொறாமையும் ஆத்திரமும் கொள்ளாமல் சந்தோஷமாகப் பொழுதுபோக்கலாம்.

ஒரு குடும்பம் வசிப்பதற்கு கூடினால் இருபத்தையாயிர ரூபா செலவிட்டு வீடு கட்டலாம். (அதுவே பெருந் தொகைதான்!) அது புழக்கத்துக்குப் போதுமோ என்று சிலர் ஐயமுறலாம். கட்டுகிற விதமாகக் கட்டினால் அதுவே யதேஷ்ட மென்போம். ஒரு லட்ச ரூபா செலவு செய்து வீடுகட்டிய ஒருவர் பத்தாயிர ரூபாய்ச் செலவிற் கட்டிய வீட்டைக் கண்டு ஆசைப்படுகிறாரே? ஏன்? அது அவ்வளவு விவேகமாக கட்டப்பட்டிருப்பதாலேயே அன்றோ? "இடம்பட வீடிடேல்" என்று ஒளவையார் சொன்னது நமக்கில்லை போலும்!

வீடு கட்டுவதின் நோக்கமென்ன? புகழுக்கும் புண்ணியத்துக் குமா? இல்லையே. நமது சொந்த சௌக்கியத்துக்குத்தானே? நம்மவர் கட்டுகிற வீடு சௌக்கியத்துக்கு முற்றிலும் உபயோக மானவைகளாக இல்லையே. இந்த வீடு கட்டுகிற விஷயத்தில், நம்ம வருள் எவ்வளவு லோபகுணமுள்ள மனிதனும் பெரும் பொருள் செலவிட முன் வருவது ஒரு ஆச்சரியம். ஒன்றுக்கு முதவாத அவர்கள் பொருள் அப்படி வீணாகப் போகட்டும். தயாளகுண முள்ள உத்தமர்கள் பொருளு மப்படிப் போகக் கூடாதென்பது தான் நமது அபிப்பிராயம்.

முடிவாக நாம் கூறுவது என்ன வெனின், 10,000 ரூபாய்க்கு மேல் 25,000 ரூபாய்க்குள் அடக்கமாகவும் அழகாகவும் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்பதும், உள் வீடுவைத்து ஒரு போதும் கட்டக் கூடாதென்பதும் சகோதரர்கள் தனித்தனி வீடுகட்டிக் கொண்டு வசிக்கவேண்டு மென்பதும், வீடுகளை எப்போதும் பெருக்கிப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டு மென்பதும், இரவில் ஒவ்வோரிடமும் தீபமிட்டு இலட்சுமி வசிக்குமிடமாகச் செய்து கொள்ளவேண்டு மென்பதுமேயாம். வீடுகட்டுகிற விஷயத்திற் கூடப் பழய வழக்க மனுட்டிக்க வேண்டியதில்லை. பெரிய வீடு கட்டுவதிற் பெருமை யொன்றுமில்லை. மண்ணாலும் கல்லாலும் கட்டுகிறவீட்டைவது நமது வாழ்க்கையின் நோக்கமன்று. சுருக்க மாக வீடுகட்டி, சுகமாக வாழ்ந்து, அதில் மிஞ்சும் பொருளை அற வழியிற் செலவிட்டு, விண்ணோரும் புகழும் வீட்டைவதே நமது வாழ்க்கையின் நோக்கமாகவேண்டும்.

**M.** சின்னையா செட்டி,
மகிபாலன்பட்டி.

# ஒரு பெருந்துக்கம்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைஸாமித்தேவரவர்கள் 2—12—11ல் இராமநாதபுரத்தில் சிவபதமடைந்தாரென்ற பெருந் துக்க சமாசாரத்தைக் கேட்டுவருந்தாதாரில்லை. இவர்கள் பெருஞ்செல்வத்துடன் கல்வியும் நிரம்பப்பெற்றவர்கள் பிரசங்கிப்பதில்மிகவல்லுநர், தயாளகுணசீலர். இவர்களது பிரிவு தமிழ்நாட்டுக்கும் சைவசமயத்துக்கும் மிக்க தீங்காகவே நிகழ்ந்ததென்பதிற் றடையில்லை. பத்து வருஷகாலமாக இவர்களால் அக்கிராசனம் வகிக்கப்பட்டு வந்த மதுரைத் தமிழ்ச்சங்கம் இனி என்ன கதி யடையுமோ என்று சங்காபிமானிகள் பலரும் வருந்துகின்றனர். இப்பெருங் காரியத்தை நிர்வகிக்கும் சக்தியும் உரிமையும் இப்போதிருக்கிற ஸ்ரீமத். சேதுபதி மஹாராஜா அவர்கட்கே அமைந்துள்ளன ஆதலின், அவர்கள் உத்தரதேசயாத்திரையினின்று மீண்டு இராமநாதபுரத்துக்கு விஜயமானவுடன் தமிழ்ச்சங்க பரிபாலனத்தை யேற்றுத் தமிழபிமானிகளை மகிழ்விப்பார்களென்றே பலரும் எதிர் பார்க்கின்றார்கள். காலஞ்சென்ற ஸ்ரீமாந். பாண்டித்துரைஸாமியவர்கள் பிரிவாற்றாமையைப் பற்றி வித்துவான்கள் சிலர் பாடிய இரங்கற்பாக்களை இதனடியில் தருகிறோம். இப்பாக்களாலேயே இவர்களின் பெருங்குண மாட்சிகள் நன்கு விளங்குமாகலின் இவண் அதிகமாக விரித்திலம்.

பத்திராதிபர்.

# இரங்கற்பாக்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான்

மு. ரா. அருணாசலக்கவிராயரவர்க ளியற்றியவை.

மண்ணுடு புகழ்நிரம்ப வாழ்ந்தபெரு வாழ்வென்று மன்ன ரெல்லாம்
எண்ணுடு தலைமைபெற்று மதுரையினிற் றமிழ்ச்சங்க மிருத்தி வைத்தே
யுண்ணுடு மானந்த முறுபாண்டித துரையரசே யுன்போல் வார்யார்
விண்ணுடு போய்ப்புகுந்தாய் மீண்டுன்னம் வாராயோ விளம்பு வாயே. (க)

வடமொழியொன் றேதேவ பாஷையென்று ரம்மொழியை மனித ராஞேர்
திடமுடன்கற் ருரிதுபோற் றென்மொழியைத் தேவரெலாந் தினமுங் கற்க
வுடனேபோய்க் கற்பிப்போ மெனநினைந்தோ வொன்றேனு முரைத்தி டாம
லடலரசர் புகழ்பாண்டித் துரையேவான் புகுந்தாய்நின் னறிவு நன்றே.(௨)

தமிழ்வளர்க்கும் பாண்டியர்சந் ததியொழிந்த தெனக்கவலைச் சலதி தன்னி
லமிழ்தருகா லத்திலஃ துண்டென்னத் தலையெடுத்திங் கதனைக் கையா
லமிழ்தருபொற்சங்கத்தாலூட்டிவளர்த்தாயந்தோவுனக்கியாங்க [ன்னே.
ளிமிழ்திரைஞா லத்தினிற்பாண் டித்துரையே செய்கைம்மா றென்னேயெ

ஒருபிழையு மில்லாத வுன்னுயிரை வாங்குவதற் கோடி யேமன்
வருவனெனி லெங்களுக்கை விடுவனோ வந்தோவிம் மண்மேல் வாழ்வை
யருவரா தினியடைதற் கென்னுவமோ நின்பால்வந் தடைந்தார் தம்மை
வெருவரா விதஞ்செயபாண் டித்துரையே தலைவிதியை வெல்வார் யாரே, ()

கொலைபுரிதல் பாவமெனத் தெரிந்திருந்துந் துப்பாக்கி கொண்டு சுட்டுஞ்
சிலைவளைத்துங் கொன்றுவிலங் கினம்பறவை தின்றுதிரி தியர்போலா
தலைமெழுகாய் மனமுருகி யவற்றுயிரை யுன்போல வொருசற் றேனும்
விலைகொடுத்து மீட்டினிக்காப்பார்யார்பாண் டித்துரையேவிளம்புவாயே.()

நாற்றிசையு முனைப்பார்த்து வைத்ததமிழ்ச் சங்கமெலா நாடிச் சென்று
வீற்றிருந்து பிரசங்கஞ் செய்துபலர் கருத்தினுக்கும் விரோத மின்றிப்
போற்றிசைத்து வியாயங்கள் புகன்றுசம ரசஞ்செய்து புகழ்பூண் டுண்மை
தேற்றியகின் பிரிவையார் சகிப்பர்பாண் டித்துரையாஞ் செம்மற் கோவே. ()

ஓங்குதமிழ்ப் புலவர்களைப் பண்டைநா ளரசர்போ லுவகை பூத்துத்
தாங்குசம மரியாதை செய்துகவி கேட்டவர்தந் தகுதி நோக்கி
வாங்குகெனச் செம்பொனுத வியபாண்டித் துரை வள்ளால் மற்றுன் போல
வீவகுதே டியுமொருவ ரெதிர்ப்படுவா ரில்லையினி யென்செய் வோமே. (௭)

எவ்வவிதத் தினுமுயர்பாற் கரசேது பதிப்பெருமா னிறந்தா னென்ற
அந்தவிமி டத்திலே நீயொருவ னிருந்ததனு லந்தத் துன்ப
மிந்தநிலத் தினிற்றமிழ்தே ரறிஞரெலா மாற்றினர்நீ யிறந்த துன்பம்
வந்தன்றிப் போவதற்கு வழியிலைபாண் டித்துரையா மன்ன ரேறே. (௮)

சில்வாழ்நாட் சிற்றறிவா ருணர்ச்சிசெயா ரெனத்தெரிந்து தேடித் தேடிப்
பல்வாய்மை யுறுநூலின் சாரமெலாந் திரட்டியெம்போற் பலர்க்கி லேசாச்
சொல்வான்பன் னூற்றிரட்டென் றொருநூல்செய் தளித்தபெருந் தோன்றால்
இல்வாழ்வில் வாழ்வென்றே யெம்பிரான் பதநிழல்புக் கிருந்தாய்வாழி.[நீயிங்

முனைத்தமிழ்ச்சங் கப்புலவர் கிரளைவிட் டுப்பிரிய மூண்ட துன்ப
மினைத்தெனவித் தமிழ்ச்சங்கத் துன்னைவிடப் பிரிந்தறிந்தே மெம்போலே
பனைத்துமுன்பா லாக்குபவர் நீசென்ற விடத்திலையே லையா நீயும் [யன்
பனைத்தனை துன் பறுபவிப்பா யங்கோபாண் டித்துரையாம் பாவ லோனே.

கல்வியழ கேயழகென் றூர்கற்றோ ரதனோடு கமலச் செம்பூஞ்
செல்விபெறு மதனுமவா முருவழகும் பெற்றறிஞர் திரள்சங் கத்தில்
நல்விஷய மத்தனையும் பற்பல்பிர சங்கத்தி னவின்ற நின்வாய்ச்
சொல்விளைவின் னமுதங்கா ணுநாளுண்டோ நம்பாண்டித் துரைப்பூ மானே.

எட்டிலெழு தௌவைமன்ன ரிற்கற்றோர் சிறப்புடைய ரெனுஞ்சொலந்தம்
பாட்டினிற்கண் டோமதனைக் கண்ணினிற்கா ணும்படிக்குப் பாவலரைக்
கூட்டிவைத்திச் சங்கத்திற் காட்டினையை யாவுன்றன் குணங்க ளிந்த
நாட்டிலினி யார்க்குவரு மங்கோபாண் டித்துரைநன் னாவ லோனே. (௧௨)

எனையசா மார்த்தியமு முளபுலவர் பலரையுங்காத் திடுதல்போல
வுனையகன்றுற் பிழைக்கறியாச் சிற்சிலரை யுங்காத்தா யுன்னை நீங்கி
யனையரினி யரைக்காசுங் கிடையாம லலைவரே யச்சோ வன்னோர்
வினைவசத்துக் கென்செயலாம் நம்பாண்டித் துரைவள்ளால் வேந்தர்வேந்தே.

காணவரு வாரையின்று வாநாளை வாவென்று கடத்தி டாமே
லூணருந்தும வேளையா யிருந்தாலும் வரவழைத்தே யுள்ளன் பாக
வேணவா வுடன்பேசி வேண்டுவன வுதவிசெய்து விடுப்பா யேயிம்
மாணமருஞ் செயலெங்குக் கற்றனைபாண் டித்துரையாம் வானோர் வாழ்வே.

எழிலளவு குணமென்ப ரஃதின்றிக் குணமதிக மெழிலுக் கென்று
மொழிகுணத்துக் கெழில்திகமென் றுமதிப்பினுக்கடங்காமுறைமையெய்திப்
பொழிலதனிற் றோன்றினை யிதுபுதுமை யாதலினாற் பொய்த்த தென்ன
அழிவில்பாண் டித்துரையே நெடுநாளிங் கிராமல்வா னடைந்தாய் நீயே. ()

பொருள்வரவு சுருங்கியதாற் சிலபுலவர் தமைப்புறத்திற் போக்கி னுய்பின்
மருவுமவர் தமைத்தொகுத்து வைப்பதற்குப் பொருண்மண்மேல்வாராததாலே
யிருவர்பொன னுலகினிற்சென் றூற்றிடைக்கு மெனவாங்க ணேகி னுயோ
தெருளுநுகல் விததிறமை மிகுந்தபாண் டித்துரைநின் செய்கை நன்றே.

அன்னதா னத்தினிலும் வித்தியா தானமுயர் வாகு மென்று
சொன்னதறிந் தநேகருக்குக் கற்பனகற் பித்துமகிழ் தோன்றூ லுன்சீ
ரென்னெனயா னெடுத்துரைப்பே னினியுன்பால் வந்துகற்பா ரேவ ரையா
மன்னர்புகழ் தருசோம சுந்தரபாண் டியனையன்பின் வழங்கு கோவே. (௧௪)

ஈதலினி லொப்பிலா வொருவனென விங்கிருந்தா யிதனை விட்டுப்
போதல்செய்தா யைந்தருவான் சுரபிசிந்தா மணிநிதிகள் போலே நீயு
மாதலன்றி வேறுபிரித் துனைவானோர் மதிப்பரோ வறியாய் போலுங்
காதலெலாங் கற்றவர்பால் வைத்தபாண் டித்துரையாங் கலைவ_லோனே. ()

பிறப்பிறப்பி லாதவனே பரமபதி யெனப் பலகநற் பேசும் பேச்சா
லுறப்பிணித்துச் சகலருக்குஞ் சைவசித்தாந் தத்துண்மை யுறுதி காட்டுஞ்
சிறப்பினுயர் வாம்பாண்டித் துரையரசே நின்னையொரு சிறிதா னுலு
மறப்பினன்றோ நினைப்பமெமைநினைக்கவிலையெனும்வருத்தம்வையேனீயே.

தாய்ப்பாஷை யெனப்பலருங் கொண்டாடுந் தமிழைவளர்தரச்செய்தாயாய்
வாய்ப்பாக வந்தெனக்குச் சங்கமொரு மகவென நீ வாயாற் சொன்ன
தேய்ப்பாவச் சங்கமுமியா மெல்லோருந் தின்புறவிவ் விடத்தை விட்டுப்[யே.
போய்ப்பாண்டித் துரையேவான் புகுந்தொளித்தாய்நின் கருத்தென்புகலுவா

சுபமுதவு திருக்குறளா தியநூற்குப் பொருள்சொல்லத் தொடங்கு வாயே
லுபகதையு மேற்கோளும் பாமரரும் பண்டிதரு முவகை பூப்ப
இபமனையாய் நீசொல்லக் கேட்டவெங்கண் மனம்புண்பா டெய்தி யென்று
மபலமுற விடுத்தகல்வ தழகோபாண் டித்துரையா மருமை மாலே. (உக)

எல்லாரும புலவரா யிருக்குமிட மேசிறந்த தெனவான் சென்று
சொல்லாரும் புலவர்சில ருள்ளவிந்த வுலகைவிட்டுத் துறந்தாய் போலும்
பல்லாரும் புகழ்பொன்னுச் சாமிநாதேந் திரன்மகவாய்ப் பாரிற் றோன்றி
நல்லாருணவல்லவனு யிருந்தபாண் டித்துரையா நங்கோ மானே. (உஉ)

இன்றமிழா யாவானோ ரிடத்திலுற்று யுன்னருமை யிம்மி யேனு
நன்றறியா ருளைதேடி வரிலெமையு மதியாரே நாடிச் செய்வ
தொன்றலதியா தேலவர்க்கு நீகற்ற தமிழ்முழுது மோது வித்தல்
அன்றறிவா மென்னும லறஞ்செய்பாண் டித்துரையா மறிஞர் கோவே. ()

மண்டலத்தி லொருவரிறந் தால்மனைவி மக்கள்சுற்றம் வருந்தி யேவாய்
விண்டழுவ தன்றிவே றழுவதுண்டோ நீ யிறந்த வெய்ய தீமை
கண்டவருங் கேட்டவரு நாடெல்லா மழக்கண்டோங் கருதி லன்ன
தெண்டருநின்குணபெருமையெம்பாண்டித்துரையரசேயியம்பிற்றன்றே.

உத்தமியாந் தமிழரசி குடியிருக்கு நின்சங்கத் துள்ள யாங்க.
ளெத்தனையோ பாடினுநின் குணங்களடங் காமையினு லிம்மட் டோடே
மத்தகய நிகர்பாண்டித் துரைவள்ளால் நிறுத்திவிட்டோம் வானோ ராரும்
புத்தமுதா சனமருந்தி மகிழ்ந்திருப்பா யின்னமுநீ பொன்றாய் வாழி. (உ௩)

---

## மதுரை வித்தியாபாநு பத்திராதிபர்

## மு. ரா. கந்தசாமிக் கவிராயர் இயற்றியவை.

தண்டமிழ்ச் சங்கத் தாபனம் புரிந்து தலைமையுற் றொருபது வருடங்
கண்டவர் விழியுங் கேட்டவர் செவியுங் களிப்புற வளர்த்துநீர் சூழ்பூ
மண்டல முழுதுந் தனதிசை பரப்பி வந்தபாண் டித்துரை வள்ளால்
அண்டரிற் புகுவா னடுத்தவர் வருந்த வகன்றனை நினக்கிஃ தழகோ. (க)

மனிதரிற் றேவ னிவனென வெவரும் வழுத்துமா றிசையுட னுதித்த
தனியுயர் வினுமத் தேவரி லொருவன் றானென விண்புகுந் திருத்தல்
தனியுயர் வாமோ தண்டமிழ்ச் சங்க காவலர் கூட்டமாங் குண்டோ
கனிமொழிப் பாண்டித் துரைமணி யேநீ காசினி விடுத்ததென் கருத்தே.

மணிகிகர் பாண்டித் துரைமக ராச வள்ளனிற் பிரிந்தவிவ் வருடந்
துணிவுறு விரோதி கிருதென முதியோர் சொற்றது மதிப்பெயர் தேளென்
றெண்ணியுரைத் ததுவுங் கிழமையைச் சனியா யிசைத்தது மெம்மனோ ருளத்
தணிவிலா வருத்தந் தரவமை தரலாற் றகுந்தகு மெனவறிந் தனமே. [துத்

எண்ணுறு புலவர் பதியென வுலகி லிலங்குபாண் டித்துரை யிறைநீ
மண்ணுறல் விடுத்து விண்ணுற வடுத்து மருவுமிந் நாள்கடை நாளென்
றண்ணுறு பலரு மறியரே வதியா யமைந்துறு விதியையென் புகல்கேன்
புண்ணுறு மனமும் புனலுறு விழியும் பொருந்தினே மதப்பதேப் பொழுதே.

வண்டமிழ்ச் செல்வி கலைகலை வழிந்து மானமற் றிடவரு மமையங்
கண்டுள மிரங்கி யுயர்தரு மணிமே கலையெழின் மிகவுறப் புதுக்கிப்
பண்டையிற் சிறப்பச் சங்கமும் புனைந்து பாதுகாத் திருந்தனை பிரிந்தாய்
மண்டலத் தினியார் புரப்பவ ருரையாய் வரதபாண் டித்துரை மாலே. (ரு)

முகத்துதி பேசிப் புறம்பழிப் பவரு முற்றவத் தாலுனை யடுத்தன்
அகத்துறு மன்புக் காட்படி னனையா ரந்திசெய லறிகினும் விடாது
சகத்துநல் வாழ்வும் விளையுளு மனையுந் தகப்பெற வளித்தவந் தனையே
இகத்துனைப் போலுங் கருணையுற் றவரா ரியம்புபாண் டித்துரை யிறையே.

தகவுறு சுத்த சைவசித் தாந்த சாத்திர முழுதுணர்ந் தவற்றிற்
புகல்வழி யொழுகிக் காட்டுகின் மருகப் புண்ணிய னெனுநட ராசன்
சகமுழு திரங்க விண்புக றகாது தடுத்தவற் கொணர்தமென் றனையான்
அகல்வழிப் புகுந்தாய் போலுமீ தாமோ வணிகொள்பாண் டித்துரை யரசே.

நறுதமிழ்ச் சங்க நடைபெற வேண்டு நனிபொரு டரும்பெருஞ் செல்வ
மிகவுடை யவனீ யங்ஙனஞ் செயாது விடுத்தது மேலவ ரெவரும்
நிகரிலாச் சேது பதிமுத்து ராம லிங்கபூ மான்புரந் தோங்கும்
புகழுறல் குறித்தே போலுமென் றறிந்தேம் புனிதபாண் டித்துரை யரசே.

நின்பொருள் சேது பதிமுத்து ராம லிங்கபூ மான்பெரு விரண்டன்
றென்பது மவனே யிப்புகழ்க் குரியா னென்பதுங் குறித்தவன் கரத்தில்
அன்புரு வாய சங்கமா மகவை யளித்தவின் புகுந்தனை நின்போல்
முனபறிந் தெவரே யாற்றுநல் லறிஞர் மொழிதிபாண் டித்துரை முகிலே.

வேறு

சேமநிதி யாகுமுத்து ராமலிங்க சேதுபதி சீமான் சொந்தப்
பூமகளை யேன்றுகொண்டான் பாமகள்சங் கமமவன்பாற் புகுதன் மாண்பாம்
நாமினிமேன் மிகையென்று மனக்கருதி நீபோய்விண் ணடுற் றாயோ
தோமில்குணம் பலபடைத்த மன்னரெலாம் புகழ்பாண்டித் துரைப்பூமானே.

மக்களுயர் வீன்றவர்க்கு மகிழ்வுறுத்து மெனவாற்பூ மகளை யேன்று
தக்கமுறை நடத்துமுத்து ராமலிங்க பூமனுயர் தமிழ்ச்சங் கத்தை
யிக்கணமே கொண்டளிப்பா னென்பதுபாற் கரராசற் கியம்பு மாறு
புக்கனையோ விண்ணகத்துப் புகலுதிபாண் டித்துரையாம் புகழ்க்கோமானே.

பாற்கரமா லவணடைந்துங் கருமணியா னிதியாதி பலவுங் கொள்ளல்
ஏற்குமா விட்புலவர்க் கிஃதுணர்த்தி யிறையையல திவற்றை மீட்டு
நாற்கவிவா ணருக்கீவா மெனக்கருதி நீபோயவிண் ணுடித் றாயோ
சேற்கண்ணியர் மடலெழுதத் திகழ்பாண்டித் துரைராச செயபூ மானே. (௧௨)

பொன்னுட்டிற் சென்றனையோ தந்தைதாய் துணைவர்முனம் புகுந்தாய் கொ
அன்னூர்வந் தய்யாவா அரசேவா எனவாரி யணைத்தார் கொல்லோ [ல்லோ
முன்னுச்சென் மருகனட னாசனுறத் தழீஇயுச்சி மோந்தாய் கொல்லோ
எங்காளி லுனைக்காண்பே மியம்புதிபாண் டித்துரையா மிசைவல் லோனே.

எதிலர்யா தும்புகல விறைமகன்கோ தொரீஇக்கொள்கை யேற்ற மென்னு
மூதறிஞர் மொழிப்படியே பலர்பிரசங் கங்களினு மூதன்மை மேவித்
தீதகழீஇ நன்றாக்கிச் சவையினர்தஞ் செவிக்கமுதாச் செய்யு நின்போற்
சாதுரிய வாக்கினர்யார் புகல்பாண்டித் துரையாம்வித் தகசீ மானே. (௧௪)

பூதிபுனைந் தக்கமணி பூண்டுசைவ மணியிவனே போது மென்ன
மேதினியோ ரெடுத்திசைக்க விளங்கியநின் றிருவழகு மெல்லத் தேன்போல்
ஓதுமுனதின்மொழியுங்கருணையுஞ்சாந்தமுமெவணபோயொளித்தவந்தோ
பாதிமதி யணிந்தபரன் பதம்புகுபாண் டித்துரைப்பேர் படைத்த கோவே.

புலவர்பதி யாம்வாழ்வு நாமகளும் பூமகளும் பொருந்தும் வாழ்வும் [ன்னாய்
உலகிலவூடந் தனையவற்றை யொருபொருளா மதித்தடைதற் குள்ளங் கொ
அலகில்வளத் தென்பாண்டி நாடுசிவ லோகமென வான்றமேலோர் [னே.
சொலலறிவா யவண்புகுதா யெங்கொளித்தாய் புகல்பாண்டித் துரைப் பூமா

பாவலவர் நாவலவர் புண்டிதர் சுவாமிகளாம் பட்டஞ் சூடிப்
பூவுலகை வஞ்சித்துப் பசுத்தோலைப் போர்த்தபுலி போலும் பல்லோர்
ஆவலுடன் பொருள்பறிக்கு மிங்காளி னீபிரிந்தா யந்தோ வந்தோ
எவரினி மெய்ப்புலமை யறிகுநர்பாண் டித்துரையா மிசைவல் லோனே. ()

எச்சபைக்குந் தலைமையுறத் தக்கவனீ யலதொருவ ரிலையென் றன்றோர்
மெச்சும் வகை யாஙகாங்குப் பிரசங்க மழைபொழிந்து விண்ணிற் சென்றாய்
இச்சகத்தி லினியாரே யென்றாலு மினியாரே யெஞ்செய் கேம்யாம்
பொசசமிலா துலகமெலாம் புகழ்பாண்டித துரையாமற் புதபூ மானே. (க௮)

மணியிரண்டு நிதிமூன்று தருவாறு புயலிருநால் வகைத்தென் றன்றோர்
எணியுரைக்க விண்மேவி யவற்றிலொன்று மில்லாமே யெல்லா முற்றுங்
கணியிதுநாண் மட்டடைந்த புவியையவறி தாக்கினையென் னடைந்தாய் கொ
(துணிவில்பெரும் புகழ்வளர்த்துத் திகழ்பாண்டித் துரையாமுத் [ல்லோ
[தமிழ்க்கோ மானே) (கக)

கோழிகிடாய் நாய்காடை பிடித்துயிரை மடித்துமதுக் குடித்து வீணிற்
பாழியுடல் வளர்த்துவருஞ் சிற்றரசர் தலைகவிழும் படிநீ தோன்றி
ஆழியுடைப் புவிபோற்றத் தமிழ்ச்சங்க நிலைநாட்டி யணிசெய் வித்தாய்
வாழியநின் பெருங்கீர்த்தி யுக்கிரபாண் டித்துரையாம வள்ளற் கோவே. ()

---

வலய்புரி வித்தியாசாலைத் தலைமைப் பண்டிதராகிய

வித்வான் நெடுவை,

## திரு. இராமஸ்வாமி ஐயங்கா ரவர்களியற்றியவை.

பாண்டியர்முன் தமிழணங்கைப் பாலித்த முறையினும்பன் மடங்காய்ப்பா
மீண்டுநிலை யுறச்சவக மொன்றிரீஇ விளக்குவித்த மேலோன் றன்னை [ரின்
வேணுனோர்பா லருள்மிகுநற் பாண்டியப்பேர்த துரைதேக வியோகச்சொற்
டிண்டுறுபே ரிடியரவ மெய்தரவின் றுயரினம்யா மிசைப்பதென்னே.[கேட்

நிலக்கணிசெய் கூடலெனுந் தலக்கணிலா வுறத்தமிழை நிறுவியாண்டும்,
புலக்கணியை புலவரெலா மலக்கணிடை மேவாது புரந்தோய் நின்சீர்

சொலக்கணியும் வலனல்லன் சுடர்க்கணிய புகழ்ப்பாண்டித்துரையேயாங்கள்
கலக்கணிரோர் மாத்திரையி னுருக்கவிக்குப் பிரிந்தகல்கா ரணந்தா னெ
ன்னே. (உ)

பூவுலகி லெங்குமுலாப் போதருமவ் வடமொழியும் பொருமை யெய்தத்
தேவர்மொழி யெனவாக்குந் தென்மொழியைக் கையகன்று சென்றதோரின்
யாவருந்தா முனிமொழியா யாக்குவர்பாண் டித்துரையோ மண்ணுலான்றோர்
பாவருமை சிறிதுணராத் தேவருற வுறவெங்ஙன் பலித்த தந்தோ. (ரு)

மண்ணுடு தயறுறமுன் விண்ணுடு பாற்கரனு டிகிப னின்னே
யண்ணுவென் றினிதழைக்கு மன்புருவா மவற்காண வகன்று யோவான்
கண்ணூருந் தேவர்கட்குந் தமிழருமை யின்னதெனக் காட்ட வேயோ
நண்ணுரும் புகழ்பாண்டித் துரையேவின் புகுந்திறமென் னவிலாய் மன்னே.

பலபுலவர் ஆங்காங்குப் பாடியசெந் தமிழ்க்கவிகள் பழுதின் றாக
நலமுறையி னுமுநத்தா நயந்தளித்த நந்தையினு நன்னூற் கெல்லாந்
திலகமெனும்பன் னூலின்றிரட்டொன்றைச்செய்தளித்தசிறப்பானிற்கோர்
இலகுறுகைம் மாறறியேம் யாம்பாண்டித் துரைசின்சி ரியம்ப வற்றோ. (கு)

தெய்வங்கள் தமிழ்மொழிமுன் றீனாற் பட்டதுவா நீர்ந்து நின்பால்
உய்வமெனவடைவதை யுளங்கொள்ளாதவனைசென்றுயுற்றென்பெற்றாய்
சைவநிலை நெறிகாட்டித் தமிழ்ச்சங்க தனைநாட்டித் தமிழ்பா ராட்டி
மெய்வருசொல் லழகாவோ வியன்பாண்டி மன்னவோ விதிதா னென்னே.()

வேணிகரு மெய்யழகும் வியன்பிரசங் கத்தழகும் மிளிர்பாப் பாடும்
மாணழகும் கொடையழகும் வளத்தழகும் கல்விபொறை வாய்மை யன்பு
பூணழகுஞ் சைவநடைப்பொலிவழகுமிவையெல்லாமபொருந்தவாழ்ந்தோன்
சேணழகு பெறச்சென்ற பாண்டிமன்ன மிவன்றிறம்யார் செப்பற் பாலார்()

தேறுதமிழ்க் கலைவலலீர் நமைப்புரந்த தேவர்கள்வின் சென்ற துனபம்
ஆறுதிரன் னவர்களினு மாயிரம்பல கதிகமதா யளிப்பான் வந்தான்
வீறுபெறு தமிழ்க்கோமான் வியன்சேதுபதியென்னும் வேந்தன்பாற்போய்க்
கூறுதிர்நவ் குறைதவிர்ப்பா னவனென்று மிந்நிலத்திற் குலவிவாழி. (அ)

## மன்னார்குடி காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
## சர்க்கரை இராமசாமிப் புலவரவர்களியற்றியவை.

—*—

புண்ணியமெல் லாந்திரண்டோர் புருடவடி வாய்முகவைப் புரியிற் றோன்றிக்
கண்ணியமெல் லாம்படைத்துக் கவிஞருக்குத் தாயாய்முற் காலத் தான்றோர்
பண்ணியநூ லனைத்தையுமிப் பாருணரும படிமதுரைப் பதியி னன்கென்
றெண்ணியசெந் தமிழ்ச்சங்க மியற்றியபாண் டித்துரைவின் னேகி னுமோ.

கன்னிமுத லிமயவரை காறுமுளோர் பணிசேது காவலற் கோர்
மன்னுயிராய்த் தமிழ்நாட்டு வாணருக்கோர் கற்பகமாய் மதுரைச சங்கத்
துனனுதமிழ் விற்பனர்க்கோர் சுடர்மகுட மாம்பாண்டித் துரைநீ முன்வாழ்
பொன்னுலகம் போயெம்மைப் புலம்பவிட்டா யென்னசெய்வோம் புகலு
வாயே. (உ)

இலக்கியமு மிலக்கணமுஞ் சித்தாந்த சாத்திரமு மிசையக் கற்றுன்
வலக்கணிக ராயிருந்த மருமகனு நடராஜ வனைல் போன
வலக்கணறு முன்னியு மடைந்தனை விண் ணதனுற்றுன் படைந்த வெங்கண்
கலக்கமறந் தினமுளதோ கவிவலபாண் டித்துரைப்பேர்க் காவ லோனே.

ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்தி லிருந்து வாளா
வாழ்வாரே வன்கண்ண ரெனமுதியோர் வகுத்தமொழி மறந்தாற் றுயோ
பாவாணர் குலஞ்சூழும் படிமதுரைச் சங்கத்தா பனஞ்செய் தென்றுஞ்
சாவாத புகழ்படைத்த தருவெனும்பாண் டித்துரையாந் தரும வானே. (௪)

இந்நாட்டு மாந்தர்களை யியற்புலவ ராக்கிவைத்தோ மியனூ றேரும்
பொன்னாட்டார் தம்பெயரைப் புலவரென் பார்பிரசங்கம்புரிந்தன் றேரைத்
தென்னாட்டுப் புலவரெனச் செய்திடுவா மெனவிண்ணிற் சேர்ந்திட் டாயோ
பன்னாட்டும் வாழ்தருவிற் பனவரெலாம் புகழுகர பாண்டிவேந்தே. (௫)

அன்னவென் றன்புடன்பே ரருள்படைத்த பாற்கரமா ல்ழைத்திட் டானோ
கண்ணேவா வெனறனது கருணையுள தந்தைவரக் கரைந்தான் கொல்லோ
விண்ணோங்கி யவர்காணும் வேட்கைமிக வானியே மேவி னையோ
புண்ணாக வெமமனத்தைப் புழுக்கியபாண் டிசுதுரைநீ புகலு வாயே. (௬)

ஊரிரங்க மனைவிமக்க ளுறவின்முறை யாரிரங்க வுனைநட் புற்ற
பேரிரகைத் தமிழ்ச்சங்கப் பிள்ளைகளே லாமிரங்கப் பேதுற் றிந்தப்
பாரிரங்க பலகலைதேர் பண்டிதரெ லாமிரங்கப் பண்ண லாமோ
சூரிரங்க வேற்படைமுன் னெருபாண்டித் துரையேயித் துயர்தீர்ப் பாயே()

இத்தலத்தின் மன்னுவிதற் கெண்ணமுண்டே லிசைநகெ வென்ப தற்சோர்
உத்தமமா ரியவிலக்கா யுயர்பொன்னுச் சாமிதவத் துதித்துத் தெய்வ
பத்திதருந் தமிழ்ச்சங்கப் பயிரைவளர்த் துலகிலிசை படைத்திட் டாய்நீ
செத்தனையென் றுளத்துயரஞ் செனிப்பதென்பாண் டித்துரைப்பேர்ச் செ
ல்வக் கோவே. (௮)

சுந்தரமா இபபாண்டித் துரைநீயிர் திரபதவி தன்னி னையோ
கொந்திரியா மலர்க்கிழவன் கூப்பிடவன் றேனுலகங் குறுகி னையோ

செந்திருமின்வாழ்நிறத்துச்செம்மல்பதஞ்சேர்ந்தனையோநீதொன்றில்லாச்
சந்திரனைச் சடைக்கணிந்தான் றாளடைந்தா யோவெமக்குச சாற்று வாயே.

சுத்தசைவ சித்தாந்த சுருதியெலா முணர்பாண்டித் துரையே தெய்வ
பத்திதவம்பொறையடக்கம்பரமசிவ பூசைகொடை பண்பு வாய்மை[ட்டோர்
முத்தமிழ்நூற் புலமையெலா முற்றுறப்பெற் றலகினங்கு மொழிந்சாய் தே
புத்தமுதே யெனப்புகழ்வா ரித்தனைக்கெத் தவமிழைத்தாய் புகலு வாயே.()

சொன்னமய மாஞ்சோம சுந்தரவி லாசமதிற் றென்னூற் சேது
மன்னர்பிரான் பாற்காபூ மான்முனெளி யேற்காட்டி வள்ள லீவன்
கன்னவெனக் கவிசொலுஞ்சர்க் கரைப்புலவன வழித்தோன் றுங் கவிஞ
பன்னியதை மறப்பேனே பாலவனத் தத்தரசே பாவி யேனே. [னென்று

புவிக்கமுத மாய்சசாந்துப் புலவர்பிரான் செய்கோவைப் பொருவி லாத
கவிக்கெளியே னெழுதுமுரை கண்டேயெங் ககற்கிலக்காய்க் கவியு மீந்து
செவிக்கினிய முகமனுரை செப்பியபாண் டித்துரைநீ தேவ ரெல்லாங்
குவிக்குமிரு கரத்தினெதிர் கொளமகிழ்வா யாம்புலம்புங் குரல்கே ளாயோ.

மெய்யான சைவநெறி விளக்குமதி ரயிற்பம்பு வெங்கீ ராலென்
மெய்யான பெரும்புண்ணின் மேற்கரதகான் மருந்தூட்டி விதன மாற்றி
யையாவஞ் சற்கவெலா வருளியபாண் டித்துரைநீ யகன்ற தாலே
யுய்யோமென் றாற்றுமெங்க ளுளப்புண்ணு மாறமருந் துதவு வாயே. (௧௫)

சந்ததமும் வந்தவர்க்குத் தமிழ்க்கலையும் பொற்கலையுந் தருங்கோ முத்திப்
பந்தவினை தவிர்த்தருளம் பலவாண குருராஜன் பாதப் போதைச்
சிந்தைசெய்து சிவபூசை தினம்புரிபாண் டித்துரைநின் றிருவை யாக்க[யோ
னெந்தவுல கினிற்காண்பேஞ் சொப்பனத்தி லேனும்வரற் கிசைந்தி டா

தக்கவிரோ திகிருதுவற் சரத்துவிருச் சிகததிங்க டனிற்பஞ் சேழ்முற்
பக்கமுமே காதசியும் ரேவதியுஞ் சோதினதிற் பதும ராகந்
தொக்கதிரு வளர்சோம சுந்தரவி லாசமதிற் சுரர்கள் போற்றச் [மானே.
சொக்கலிங்கப் பெருமான்றன் றுணையடிசேர்ந் தனன்பாண்டித் துரைக்கோ

# புத்தகக்குறிப்பு.

---

**நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம் :—** இது மகிபாலன பட்டி வாசியும், மதுரைத தமிழ்ச்சஙக விததுவான்களி லொருவரும், வடமொழி தென்மொழி வல்லுநரும் ஆகிய ஸ்ரீமத மு. கதிரேசச் செட்டியாரவர்களால் தம் இனத்தார்களின் சீர்திருததத்தைப்பற்றி யெழுதப்பெற்று மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையின் இரண்டாம் ஆண்டு நிறைவேற்றக் கொண்டாட்டப் பெருஞ்சபையில் அரஙகேற்றப் பெற்ற ஒரு வசன நூல் இதனுள் கல்வியின் அருமை பெருமைகளும், கலாசாலைகள் சபைகளின் முறைகளும, சமயததின் பொதுத் தன்மையும், சைவத்தின் விசேடமும், பஞ்சாக்கரச் சிறப்பும, உபதேச விதிகளும், ஆசாரிய இலக்கணங்களும், ஜீவகாருணிய வியல்பும், விவாக முதலியவற்றின் விதிகளும், வர்த்தக முறையும், அறஞ்செய்யும் மாண்பும், ஒற்றுமையின் பயனும் ஆகிய இவை போன்ற பல அரிய விஷயங்கள் தக்க பிரமாணங்களுடன் எழுதப்பெற்றுள்ளன. நகரததாரனைவரும் அவசியம் வாசித்தறியத்தக்க நூலேயாம். இந்நூலின் அருமை பெருமைகளைப்பற்றி சென்னை பென்ஷன் ஐக்கோர்ட் ஜட்ஜியும், ஒப்புயர்வில்லாப் பெருமை வாய்ந்தவரும், ஆகிய ப்ரும்மஸ்ரீ ஸர். எஸ். சுப்பிரமணியய்யரவர்தள் முதலிய தக்கார் பலர் அபிப்பிராயங் கொடுத்துள்ளார்கள். இதனை யரங்கேற்றுங்கால் உடனிருநது மகிழ்ந்தவரும, செநதமிழ் நூலுணர்ச்சி நன்கு வாய்நதவரும், "சிவநேயமிக்காரும், பரமபரைச செல்வமுடையாரும், ஆகிய தேவிக்கோட்டை ஸ்ரீமாங். மெ. அரு. நா இராமநாதச் செட்டியார அவர்களே இந்நூலை அச்சிட்டிருக்கின்றார்கள். இந்நூலாசிரியர் தம மினத்தவர்பொருட்டே இதனை யெழுதினாராயினும் இநநூலுட்கூறப்படும் விஷயஙகள் பல எல்லாருக்கும்பயன்விளைப்பனவாகவே பொருத்தமுற்றுள்ளன. ஆதலின் தமிழ் மக்கள் பலரும் வாங்கி வாசித்தற்குரியதே யாகும. வேண்டுவோர் திருப்புததூர் தாலூகா மகிபாலன்பட்டி வித்துவான ஸ்ரீ. மு. கதிரேசச செட்டியார் அவர்களிடத்தும் மேலைச்சிவப்பட்டி சன்மார்க்கசபை அக்கிராசனாதிபதி ஸ்ரீ வ. பழ. சா. பழனியப்ப செட்டியாரவர்களிடததும், தேவிகோட்டை ஸ்ரீ மெ. அரு. நா. இராமநாதச் செட்டியாரவர்களிடத்தும், கொழும்ப ஸ்ரீ கரு முத்து அழகப்பசெட்டியாரவர்களிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

---

# சமாசாரக்கொத்து.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையில் நடந்த மகுடாபிஷேக கொண்டாட்டம்:—டிசம்பர் 12௳ மாட்சிமைதங்கிய 5-வது ஜியார்ஜ் சக்கரவர்த்திமஹாராஜா அவர்களின் மகுடாபிஷேகக்கொண்டாட்டத்தின்பொருட்டுச்சபைகூடியது. அன்றுசபையார்விரும்பியவண்ணம் மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு கதிரேசச்செட்டியாரவர்கள் அக்கிராசனத்து அமர்ந்தார்கள் தலைவரவர்களே முகவுரை கூறியவுடன் நம் மகாராஜா அவர்களின் விளம்பரத்தை வாசித்து அவர்களுடைய இயற்கை நலனை யாவரும் அறியும்படி ஜியார்ஜ் சக்கிரவர்த்தியார் அவர்களின் மாட்சிமை என்பதையும், பொன்னமராவதி உபாத்திமைச் சங்கத்துக் காரியதரிசி ஸ்ரீ வி வைத்தியநாதஐயா அவர்கள் அம்மன்னரவர்களும அம்மன்னர் பரம்பரையாரவர்களும் நமக்குச் செய்து வருகின்ற நன்மை யெல்லாங்கடைப்பிடித்து ஆங்கில அரசின் நன்மை என்பதையும், இந்நகர்க் கணேசர் செந்தமிழ்க்கலாசாலை தமிழ்ப்போதகாசிரியர் ஸ்ரீ மூ சிவகாரவேறபிள்ளை அவர்கள் செய்தற்கரியவுதவி செய்து நம்மையாளும் நம்மன்னவர்களுக்குச் செய்யும் கடப்பாடு இது என்பது தோன்ற 'இராஜபக்தி' என்பதையும், அம்மன்னரவர்கள் முக்கியமாகக்கொண்டொழுகுவதும் அவர்களால் நாமெல்லா மெய்தப் பெறுவதுமிதுவே யென்பது தோன்ற வேந்தன்பட்டி ஸ்ரீ பழ. கரு. இராமலிங்கச்செட்டியாரவர்கள் 'கல்வி' என்பதையும் இனிமைபெற உபந்நியாசித்தார்கள். அன்று இச்சபையில் நிகழ்ந்த மகுடாபிஷேககொண்டாட்ட மகிழ்ச்சியைப்பற்றியும் சக்கரவர்த்தி சக்கரவர்த்தினியா ரவர்களுக்கு நீண்ட வாணாளையுதவும்படி செய்த கடவுட் பிரார்த்தனையைப் பற்றியும தர்பார் கனம் செக்ரெட்டெரி அவர்களுக்குத் தந்திமூலந்தெரிவிக்கவேண்டுமென்று தலைவரவர்கள் பிரேரேபணை செய்யச் சபையாரவர்கள் அங்கீகாரத்தின் மேல் சபைத்தலைவர் ஸ்ரீ வ. வழ. சா பழநியப்பசெட்டியாரவர்கள் தந்திமூலந் தெரிவித்தார்கள். (மேலைச்சிவபுரிவாசி.)

• • •

இம்மாதம் 7௳ காலை 9 மணிக்கு கல்கத்தாவில் ஒரு பயங்கரமான பூகம்பம் உண்டாயிற்று. நல்லவேளையாய் சேதம் ஏதுமில்லை.

காலஞ்சென்ற ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைஸாமித் தேவரவர்கள் ஸ்தானத்தில் ஸ்ரீ பி எஸ் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இப்போதைக்கு மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பிரஸிடெண்டாக தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

* * *

மதுரை கலெக்டராகிய மிஸ்டர் காப் 15வ டில்லியிலிருந்து திரும்பிவந்து தம் வேலையை ஒப்புக்கொள்கிறார் இவர் ஸ்தானத்தில் கலெக்டர் வேலை பார்த்துவரும் மிஸ்டர் ராபர்ட்ஸன் இராமநாதபுரம் கலெக்டராக நியமிக்கப்படுவாரென்றும் இராமநாதபுரம் கலெக்டர் மிஸ்டர் J. F. பிரயண்டு நீண்டரஜாவில் சீமை செல்லுகிறார் என்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

* * *

நேபாள மகாராஜா 10வ யன்று காலஞ்சென்ற செய்தியறிந்து விசனிக்கிறோம்.

* * *

மகமதிய யூனிவர்ஸிட்டிக்கு 30 லட்சம் ரூபாய் கையொப்பமாகியும் கொடுபட்டுள்ள மொத்தத் தொகை 18 லட்சம்தான் என்றும் ஹிந்து யூனவர்ஸிடிக்குக் கையொப்பமான ரூபா 40 லட்சமாயினும் சேர்ந்திருப்பதும் 10 லட்சமே என்றும் அறிந்து விசனிக்கிறோம.

* * *

மலேரியா என்ற விஷஜுரத்துக்குப் புளியமரங்கள் நல்லவையாம். 300 வருஷங்களுக்கு முன் இவ்வுண்மையை திருவாங்கூர் சமஸ்தானத்து வைத்தியர்கள் கண்டுபிடித்துச்சொல்ல அங்கு புளியமரங்கள் பயிராக்கப்பட்டனவென்றும் ஆகலால் அங்கு மலேரியா ஒழிந்ததென்றும் ஆதலால் வட இந்தியாவிலும் அவ்வாறு செய்து அச்சுரத்தை முற்றிலும் ஒழிக்கவேண்டுமென்றும் ஒருவர் அபிப்பிராயப்படுகிறார்.

* * *

கியூபா தீவில் ஓரிடத்தில் வெட்டியபோது இற்றைக்கு 1090 வருடங்களுக்குமுன் புதைபுண்ட ஒரு பிரேதத்தின் அஸ்தியும 24 அங்குலமுள்ள அதன பாகமும காணப்பட்டதாம். ஜெர்மன்சக்கரவர்த்தியாகிய கெய்ஸர் அதனைக்கண்டு அதிசயித்து இது புராதன ஆச்சர்யங்களுள் ஒன்றெனப் புகன்றனராம்.

பத்திராதிபர்.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

| திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். | ஸ்ரீ காசி. | பட்டு பீதாம்பரக் காட்லாக் இனமாக அனுப்பப்படும். |
|---|---|---|

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 82 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

| முழம் | அகலம் | 1-க்கு | கூ | முழம் | அகலம் | 1-க்கு | கூ |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2½ | 6முதல | 8 | 7 | 3 | 10 முதல் | 13 |
| 5 | 3 | 7 | 9 | 8 | 3 | 12 | 15 |
| 6 | 2 | 8 | 9½ | 9 | 3 | 14 | 16 |
| 6 | 3 | 9 | 13 | 10 | 3 | 15 | 18 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், லைசும், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழ அகலம். சிவப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—0—0 தபால் செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | .. ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த சொம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய, அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

விலாசம்: மானேஜர்,

# பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, Benares City.